தினபூமி
thinaboomi.com
பூமி: 26 சுற்று: 126 புரட்டாசி 30
Regd. No.TN/WR/SLM(E)/14/2017-2019 RNI Regn. No. TNTAM/2001/4003
சேலம், வியாழன், அக்டோபர் 16, 2025 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00



## ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் 7-வது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியா


...2-ம் பக்கம்

## பீகார் சட்டமன்ற தேர்தலில் போட்டியிட மாட்டேன்: பிரசாந்த் கிஷோர் திட்டவட்டம்

...3-ம் பக்கம்

## ஒருநாள் டி-20 போட்டியில் பங்கேற்க ஆஸ்திரேலியா புறப்பட்டது இந்திய அணி

....6-ம் பக்கம்






● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்வில் 5 வருடங்களில் ரூ.2000 கோடி முதலீடு மற்றும் 3000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் போரூரிலுள்ள ஹிட்டாச்சி குழுமத்தை சேர்ந்த ஹிட்டாச்சி எனர்ஜி டெக்னாலஜி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையத்தின் விரிவாக்க திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. உடன் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா உடனிருந்தார்.

# தமிழ்நாடு அரசின் கூடுதல் செலவுக்கு ரூ.2,915 கோடி முதல் துணை மதிப்பீடு

## சட்டசபையில் தாக்கல் செய்தார் அமைச்சர்

சென்னை, அக். 16-

**2025-2026ம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் மொத்தம் ரூ.2,915 கோடி நிதியை ஒதுக்குவதற்கு வழிவகை செய்கின்றன என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.**

தமிழக சட்டசபையில் நேற்று நிதி மற்றும் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு 2025-2026-ம் ஆண்டு ஏற்பட்ட கூடுதல் செலவுக்கான முதல் துணை மதிப்பீடுகளை வெளியிட்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

2025-2026ம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் மொத்தம் ரூ.2,914.99 கோடி நிதியை ஒதுக்குவதற்கு வழிவகை செய்கின்றன.

2025-2026ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்பட்ட பிறகு, புதுப் பணிகள் மற்றும் புது துணைப் பணிகள் குறித்தது ஒப்பளிப்பு செய்யப்பட்ட இனங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், எதிர்பாராச் செலவு நிதியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ள தொகையினை அந்நிதிக்கு ஈடுசெய்வதும் இத்துணை மானியக் கோரிக்கையின் நோக்கமாகும்.

அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரிந்து இயற்கை எய்திய ஓய்வு பெற்ற மற்றும் தன்விருப்ப ஓய்வுபெற்ற தொழிலாளர்களுக்கு உரிய ஓய்வூதியப் பணிப்பலன்களை வழங்கிட, வழிவகை முன்பணமாக ரூ.1,137.97 கோடியை அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் மானியக் கோரிக்கை எண் 48 போக்குவரத்துத் துறை என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

2024-ம் ஆண்டு ஏற்பட்ட பெஞ்சல் புயல் பாதிப்புகளுக்காக தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து 2025-2026ம் ஆண்டு பெறப்பட்ட உதவித்தொகை ரூ.822.34 கோடியை மாநில பேரிடர் நிவாரண நிதிக்கு மாற்றம் செய்ய அரசு அனுமதித்துள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் மானியக் கோரிக்கை எண் 51 இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் பழைய பேருந்துகளுக்குப் பதிலாக 3 ஆயிரம் புதிய பி.எஸ்.6 வகை பேருந்துகளை 2025-2026ம் ஆண்டில் வாங்குவதற்காக பங்கு மூலதன உதவியாக ரூ.471.53 கோடியை கூடுதலாக அரசு அனுமதித்துள்ளது. இதற்காக துணை மதிப்பீடுகளில் ரூ.1,000 மானியக் கோரிக்கை எண் 48 போக்குவரத்துத் துறை என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. மீதத் தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பில் இருந்து மறுநிதி ஒதுக்கத்தின் மூலம் செலவிடப்படும்.

2025-2026ம் ஆண்டில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தை செயல்படுத்துவதற்காக கூடுதல் தொகை ரூ.469.84 கோடியை அரசு அனுமதித்துள்ளது.

இதற்காக துணை மதிப்பீடுகளில் மானியக் கோரிக்கை எண் 42 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை என்பதன் கீழ் ஒவ்வொரு இனத்தின் கீழும் ரூ.1,000 சேர்க்கப்பட்டுள்ளது. மீதத்தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பில் இருந்து மறுநிதி ஒதுக்கத்தின் மூலம் செலவிடப்படும்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு கூறினார்.

### விளையாட்டு பல்கலை. சட்ட மசோதா: சுப்ரீம் கோர்ட்டில்

# தமிழக கவர்னருக்கு எதிராக வழக்கு

புதுடெல்லி, அக். 16-

**உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக சட்டத்தை திருத்தம் செய்வதற்கான சட்ட மசோதா தொடர்பாக கவர்னருக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்துள்ளது. அதில் மசோதாக்களை கவர்னர் கையாளும் விதம் அரசமைப்புக்கு எதிரானது என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.**

தமிழக கவர்னர் ஆர்.என்.ரவிக்கு எதிராக தமிழக அரசு, சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள்ளது. தமிழக சட்டசபையில் கடந்த ஏப்ரல் 29 ஆம் தேதி தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக சட்டத்தை திருத்தம் செய்வதற்கான சட்ட மசோதா நிறைவேற்றி கவர்னருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. விளையாட்டு பல்கலைக்கழகக் குழுவில் நிதித்துறை செயலர் ஒருவரை நியமிக்க ஏதுவாக சட்ட திருத்தம் செய்யப்பட்டிருந்தது.

இந்த மசோதாவை ஜனாதிபதிக்கு தமிழ்நாடு கவர்னர் அனுப்பி வைத்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, கவர்னருக்கு எதிராக தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், "மசோதாக்களை கவர்னர் கையாளும் விதம் அரசமைப்புக்கு எதிரானது. கவர்னரின் நடவடிக்கை தன்னிச்சையானது என்று அறிவிக்க வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக அரசின் நடவடிக்கையால் ஆம்னி பஸ் கட்டணம் குறைப்பு

சென்னை, அக். 16-

**4 மடங்கு உயர்ந்த ஆம்னி பஸ் கட்டணம் தமிழக அரசின் நடவடிக்கையால் குறைக்கப்பட்டுள்ளது.**

தீபாவளி, பொங்கல் உள்ளிட்ட பண்டிகை காலங்களில் சென்னையில் இருந்து பொதுமக்கள் தங்கள் சொந்த ஊர்களை நோக்கி படையெடுப்பார்கள்.

கார் உள்ளிட்ட சொந்த வாகனங்கள் இல்லாதவர்கள் சொந்த ஊர்களுக்கு செல்ல ரெயில், அரசு மற்றும் ஆம்னி பஸ் சேவையை பயன்படுத்துவார்கள்.

வரும் 20ஆம் தேதி தீபாவளி பண்டிகை கொண்டாடப்பட இருக்கும் நிலையில், ஆம்னி பஸ்கள் டிக்கெட் விலையை பல மடங்கு உயர்த்தி உள்ளதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது. வழக்கமான கட்டணத்தை விட 4 மடங்கு உயர்த்தப்பட்டதாக கூறப்படுகிறது.

அதன்படி சென்னையில் இருந்து நாகர்கோவிலுக்கு குளிர்சாதன படுக்கை வசதி பஸ்சில் ரூ.4,399-ம், நெல்லைக்கு ரூ.3,999-ம், தூத்துக்குடிக்கு ரூ.4,085, மதுரைக்கு ரூ.3,932, திருச்சிக்கு ரூ.3,899, கோவைக்கு ரூ.4,420, சேலத்துக்கு ரூ.4,110 என்று அதிகபட்சமாக கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. இந்த கட்டண உயர்வுக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது.

இதைத்தொடர்ந்து தீபாவளி பண்டிகைக்கு கூடுதல் கட்டணம் வசூலிக்கும் ஆம்னி பஸ்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக அரசின் போக்குவரத்து ஆணையர் எச்சரிக்கை விடுத்தார்.

மேலும் பயணிகள் புகார் தெரிவிக்க மாவட்டவாரியாக செல்போன் எண்களும் அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் போக்குவரத்து ஆணையர் கஜலட்சுமி தலைமையில் நடைபெற்ற ஆம்னி பஸ் உரிமையாளர்கள் ஆலோசனை கூட்டத்துக்கு பிறகு, 4 மடங்கு உயர்த்தப்பட்ட ஆம்னி பஸ் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. தென் மாவட்டங்களுக்கு 30 சதவீதம் வரையிலும், திருச்சி, கோவை, சேலம் ஆகிய ஊர்களுக்கு 50 சதவீதம் வரையிலும் கட்டணம் குறைக்கப்பட்டு இருக்கிறது. தொடர்ந்து ஆம்னி பஸ்களுக்கு வெளியிடப்பட்ட கட்டண அட்டவணைப்படி கட்டணம் வசூலிக்கப்படுகிறதா என்பது கண்காணிக்கப்பட இருப்பதாக போக்குவரத்துத் துறை தரப்பிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கரூர் நெரிசல் சம்பவம் தொடர்பாக கவனஈர்ப்பு தீர்மானம்:

# தமிழ்நாடு சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் விளக்கம்

## த.வெ.க. தலைவர் 7 மணி நேரம் தாமதமாக வந்ததால்தான் 41 பேர் உயிரிழக்க காரணம்

சென்னை, அக். 16-

**கரூர் நெரிசல் சம்பவம் தொடர்பாக நேற்று சட்டப் பேரவையில் கொண்டு வரப்பட்ட கவனஈர்ப்பு தீர்மானம் தொடர்பாக விளக்கம் அளித்த முதல்வர் மு.க.ஸ்டாலின், த.வெ.க. தலைவர் 7 மணி நேரம் தாமதமாக வந்தததால்தான் 41 பேர் உயிரிழக்க முக்கிய காரணம் என்றும் அவர் விளக்கமளித்தார்.**



**காவல்துறையைப் பொறுத்தவரை வழக்கமாக அரசியல் பரப்புரை கூட்டங்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு காவலர்களின் எண்ணிக்கையைவிட அதிகமாகவே வழங்கப்பட்டிருந்தது. பொதுக்கூட்ட நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களால் 10,000 பேர் வருவார்கள் என தெரிவிக்கப்பட்ட நிலையில் அதைவிட கூட்டம் அதிகமாக வரும் என எதிர்பார்த்து கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.**
**- முதல்வர் மு.க.ஸ்டாலின்**

### பெரும் சோகத்துக்கு...

சட்டப்பேரவைக் கூட்டத்தொடரின் இரண்டாம் நாளான நேற்று, கரூர் சம்பவம் தொடர்பாக முதல்வர் மு.க. ஸ்டாலின் விளக்கம் அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: கரூர் துயரச் சம்பவம் ஒட்டுமொத்த தமிழக மக்களின் மனதையும் உலுக்கியது. நம் அனைவரையும் பெரும் அதிர்ச்சிக்கும் பெரும் சோகத்துக்கும் உள்ளாக்கியது. இறந்துபோனவர்களுக்கு ஆழ்ந்த அஞ்சலியை நான் செலுத்துகிறேன். உறவுகளை இழந்த அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### வழங்க இயலவில்லை

கரூர் வேலுசாமிபுரத்தில் த.வெ.க. தலைவரின் அரசியல் நிகழ்ச்சி நடைபெற்றது. அக்கட்சியின் கரூர் மேற்கு மாவட்டச் செயலாளர் இதற்கான அனுமதியைக் கோரி இருந்தார். அவர் அனுமதி கோரிய இடங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்படும், பொதுமக்களுக்கு தொல்லை ஏற்படும் என்பதாலும் பாதுகாப்பு காரணங்களாலும் அனுமதி வழங்கப்படவில்லை. செப். 25ம் தேதி காலை லைட்ஹவுஸ் கார்னர் அல்லது உழவர் சந்தைப் பகுதியில் அனுமதி கோரிய மனுவுக்கும், கூட்ட அளவு மதிப்பீடு மற்றும் பாதுகாப்பு காரணங்களால் அனுமதி வழங்க இயலவில்லை.

### 11 நிபந்தனைகளுடன்

பின்பு, செப். 29 அன்று அக்கட்சியின் கரூர் மேற்கு மாவட்டச் செயலாளர், வேலுசாமிபுரத்தில் 27ம் தேதி அன்று மக்கள் சந்திப்பு நடத்த அனுமதி கோரினார். மனு ஏற்கப்பட்டு, 11 நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டது. கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மூன்று கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 5 துணை காவல் கண்காணிப்பாளர்கள், 18 ஆய்வாளர்கள், 75 உதவி ஆய்வாளர்கள், ஆயுதப்படை காவலர்கள் உள்ளிட்ட 515 காவலர்கள் கரூர் மாவட்டத்தில் இருந்து பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

### 606 பேர் காவல் பணியில்

மேலும், வெளி மாவட்டங்களில் இருந்து ஒரு காவல் துணை கண்காணிப்பாளர், 2 ஆய்வாளர்கள், 8 உதவி ஆய்வாளர்கள், 60 ஆயுதப்படை காவலர்கள், 20 அதிவிரைவு காவலர்கள் என 91 பேர் வரவழைக்கப்பட்டிருந்தனர். அன்றைய தினம் மொத்தம் 606 பேர் காவல் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். காவல்துறையைப் பொறுத்தவரை வழக்கமாக அரசியல் பரப்புரை கூட்டங்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு காவலர்களின் எண்ணிக்கையைவிட அதிகமாகவே வழங்கப்பட்டிருந்தது. பொதுக்கூட்ட நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களால் 10,000 பேர் வருவார்கள் என தெரிவிக்கப்பட்ட நிலையில் அதைவிட கூட்டம் அதிகமாக வரும் என எதிர்பார்த்து கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

### 12 மணிக்கு பதிலாக...

கூட்டம் நடத்த அனுமதி கோரிய கடிதத்தில் கூட்டம் நடத்த மாலை 3 மணி முதல் இரவு 10 மணி வரை என குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால், செய்தியாளர் சந்திப்பு மற்றும் சமூக ஊடகங்களில் மதியம் 12 மணிக்கு கட்சியின் தலைவர் கரூர் வருவதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்திருந்தார். இதனால், கரூரில் மக்கள் காலை முதலே மக்கள் வரத் தொடங்கினார். செப். 27ம் தேதி அக்கட்சியின் தலைவர் சென்னையில் இருந்து காலை 8.40 மணிக்குப் புறப்பட்டு 9.25 மணிக்கு திருச்சி வந்தடைந்தார். அதன் பின்னர் நாமக்கல் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பிறகு கரூருக்கு இரவு 7 மணிக்கு வந்துள்ளார். அதாவது அறிவிக்கப்பட்ட 12 மணிக்குப் பதிலாக 7 மணி நேரம் கடந்துதான் வந்தார். இந்த காலதாமதம் கூட்ட நெரிசலுக்கு முக்கிய காரணமாக இருந்தது.

### செய்யப்படவில்லை...

இங்கே, அனைத்து கட்சிகளைச் சார்ந்தவர்களும் இருக்கிறீர்கள். உங்கள் அனைவருக்கும் தெரிந்த விஷயம்தான். கூட்ட ஏற்பாட்டாளர்கள் சில முக்கிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அவை அன்றைய தினம் கரூரில் செய்யப்படவில்லை. காலை முதல் காத்திருந்த மக்களுக்கு போதிய குடிநீர் இல்லை, உணவு ஏற்பாடும் ஏற்பாட்டாளர்களால் செய்யப்படவில்லை. இயற்கை உபாதைகளைக் கழிக்க பெண்களால் வெளியே செல்ல முடியவில்லை.

### அதிகமான கூட்டம்....

கரூர் மாவட்ட எல்லை தவிட்டுப்பாளையம் சோதனைச் சாவடி நிகழ்ச்சிக்கு

(கடைசி பக்கம் பார்க்க)

# கரூர் கூட்ட நெரிசல் விவகாரத்தில் அ.தி.மு.க. அரசியல் செய்கிறதா?

## எடப்பாடி பழனிசாமி பேட்டி

சென்னை, அக். 16-

**கரூர் நெரிசல் விவகாரத்தில் நாங்கள் அரசியல் செய்யவில்லை என்று எடப்பாடி பழனிசாமி பரபரப்பு தெரிவித்துள்ளார்.**




சட்டமன்றத்தில் இருந்து வெளிநடப்பு செய்தபின் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

ஜனவரியில் அ.தி.மு.க. கூட்டம் நடத்த கரூர் வேலுச்சாமிபுரத்தில் அனுமதி மறுக்கப்பட்டது. நீதிமன்றத்துக்கு சென்ற பிறகே எங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. எங்களுக்கு நிராகரித்த இடத்தை தவெகவிற்கு எதற்காக அரசு கொடுத்தது?. அசம்பாவிதம் நடக்க வேண்டும் என திட்டமிட்டு கொடுத்ததாக மக்களும் சந்தேகிக்கின்றனர். கரூர் சம்பவம் தொடர்பாக சட்டப்பேரவையில் பேச எங்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. நாங்கள் கருத்து கூறிய பிறகு முதல்வர் பதிலளிக்க வேண்டும் என பேரவையில் கேட்டோம்; கரூரில் உரிய பாதுகாப்பை கொடுத்திருந்தால் உயிரிழப்புகளை தடுத்திருக்கலாம். கரூர் நெரிசல் விவகாரத்தில் நாங்கள் அரசியல் செய்யவில்லை. மக்களுக்காகவே பேசுகிறோம்.

த.வெ.க. தலைவர் 4 மாவட்டங்களில் மக்கள் சந்திப்பு கூட்டங்களை நடத்தி உள்ளார். ஏற்கெனவே நான்கு கூட்டங்களுக்கு எவ்வளவு மக்கள் பங்கேற்றார்கள் என உளவுத்துறை, காவல்துறை, அரசுக்கு தெரியும். அதற்கு ஏற்றவாறு இடத்தை ஒதுக்கி இருக்க வேண்டும். அவசர அவசரமாக ஒரு நபர் ஆணையத்தை எப்படி அமைக்க முடியும். உடற்கூறு ஆய்வு செய்ததை சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. உண்மை சம்பவத்தை மறைக்க அரசு நினைக்கிறது. ஒரு நபர் ஆணையம் முறையாக செயல்பட எந்த உதவியும் செய்யவில்லை. கரூரில் 500 பேர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டதாக ஏ.டி.ஜி.பி. கூறினார். 660 பேர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டதாக முதல்வர் கூறுகிறார்; இதிலேயே முரண்பாடு. இதனால்தான் கரூர் சம்பவத்தில் அரசின்மீது சந்தேகம் எழுகிறது.

சட்டமன்றத்தில் கரூர் விவகாரம் குறித்து முதல்வர் விளக்கம் கொடுத்தார். த.வெ.க. தலைவர் அவர்கள் மக்கள் சந்திப்புக் கூட்டத்தில் பத்து நிமிடம் பேசியிருப்பார். அப்போது ஒரு செருப்பு வந்து அங்கு விழுகிறது. விழுந்தது குறித்து முதல்வர் எதுவுமே சொல்லவில்லை. சட்டமன்றதுல பேசினா, நீக்கிவிடுவார்கள்.. அதனால், மக்களுக்கு தெரிவிக்க, ஊடகங்கள் வாயிலாக பேசுகிறேன் என்று தெரிவித்தார்.

**மார்க்கெட் விலை நிலவரம்**



BSE ↑ 575.45 பாயின்ட் 82,605.43

NSE ↑ 178.05 பாயின்ட் 25,323.55



**தங்கம்** 1 சவரன் ₹94,880 | 1 கிராம் ₹11,860



**வெள்ளி** 1 கிலோ ₹207,000 | 1 கிராம் ₹207.00



**டாலர்** ₹88.01

**பெட்ரோல்** ₹100.75 | **டீசல்** ₹92.34



# ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் 7-வது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியா

**நியூயார்க், அக். 16-**

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் 7-வது முறையாக இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டது.

உலகம் முழுவதும் மனித உரிமைகளை ஊக்குவிப்ப தற்காகவும் மற்றும் பாதுகாப்பதற்காகவும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சில் தொடங்கப்பட்டது.

இந்நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் உறுப்பு நாடுகளுக்கான தேர்தல் நேற்று முன்தினம் நடந்தது.

இதில், இந்தியா, பாகிஸ்தான் என 14 நாடுகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

இதுபற்றி ஐ.நா.வுக்கான நிரந்தர இந்திய பிரதிநிதியான தூதர் ஹரீஷ் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 2026-28 ஆண்டுகளுக்கான ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலுக்கு 7-வது முறையாக இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளது.



ஆதரவளித்த அனைத்து நாடுகளுக்கும் நன்றிகள். மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரம் ஆகியவற்றுக்கான இந்தியாவின் ஈடுஇணையற்ற ஈடுபாட்டை இது பிரதிபலிக்கிறது. எங்களுடைய பதவி காலத்தில் இந்த நோக்கத்திற்காக செயலாற்ற நாங்கள் ஆவலாக காத்திருக்கிறோம் என பதிவிட்டு உள்ளார்.

இதற்கான தேர்தல் நேற்று முன்தினம் நடந்து முடிந்தது. இதன்படி, 2026 முதல் 2028 வரையிலான 3 ஆண்டு காலகட்டத்திற்கு மீண்டும் இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டு கவுன்சிலில் சேவையாற்றும். பருவகால மாற்றம், சுகாதாரம் மற்றும் வறுமை ஒழிப்பு விவகாரங்கள் உள்ளிட்ட விசயங்களை கவுன்சிலில் சேர்த்துள்ளதுடன், மனித உரிமைகளுக்காக விரிவான அணுகுமுறைகளை ஐ.நா. கவுன்சிலில் இந்தியா சமர்ப்பித்து வருகிறது.

### ஒரு வாரத்தில் முடிக்க வேண்டிய போர்:

# புதின் மீது ட்ரம்ப் கடும் விமர்சனம்

**வாஷிங்டன், அக். 16-**

உக்ரைன் மீதான பேர் ஒரு வாரத்தில் முடிய வேண்டிய என்று புதின் மீது ட்ரம்ப் கடுமையாக விமர்சனம் செய்துள்ளார்.

உக்ரைனுக்கும் ரஷியாவுக்கும் இடையே கிட்டத்தட்ட 4 ஆண்டுகளாக போர் நீடித்து வருகிறது. இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் மேற்கொண்ட முயற்சிக்கு பலன் கிடைக்கவில்லை. இதனால், அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், ரஷிய அதிபர் புதினை கடுமையாக விமர்சித்து வருகிறார். அந்த வகையில் நேற்று முன்தினம் வெள்ளை மாளிகையில் அளித்த பேட்டியிலும் கடுமையாக விமர்சித்துள்ளார். இது தொடர்பாக ட்ரம்ப் கூறியதாவது:- புதினுக்கும் எனக்கும் இடையே நல்ல உறவு இருந்ததால் நான் மிகவும் ஏமாற்றமடைந்துள்ளேன். அவர் ஏன் இந்தப் போரைத் தொடர்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. இந்தப் போர் அவருக்கு மிகவும் மோசமாக இருந்தது. அவர் நான்கு வருடங்களாக ஒரு போரில் ஈடுபட்டுள்ளார். அதை ஒரு வாரத்தில் அவர் வென்றிருக்க வேண்டும். இந்தப் போரினால் புதின் சுமார் 15 லட்சம் வீரர்களை இழந்து இருக்கலாம் அல்லது அதற்கு நிகரான எண்ணிக்கையில் இருக்கும். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு நடந்த மிகப்பெரிய இறப்பாக இருக்கலாம்.

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான ஒரு போர் உட்பட எட்டுக்கும் மேற்பட்ட போர்களை முடிவுக்குக் கொண்டு வந்தேன், என்றார். உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியை நாளை ட்ரம்ப் சந்தித்து பேச உள்ளார். வெள்ளை மாளிகையில் இந்த சந்திப்பு நடைபெற உள்ளது. ஜெலன்ஸ்கியை சந்தித்து பேசுவதற்கு முன்பாக ட்ரம்ப் வெளியிட்டுள்ள இந்தக் கருத்து முக்கியத்துவம் பெற்றுள்ளது.

# ஆப்கான் - பாகிஸ்தான் எல்லையில் பதற்றம் 40 தலீபான்கள் கொல்லப்பட்டதாக தகவல்

**இஸ்லாமாபாத், அக். 16-**

ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் எல்லையில் அதிகரிக்கும் பதற்றத்தால் 40 தலீபான்கள் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஆப்கானிஸ்தானில் தலீபான்களின் ஆட்சி நடந்து வருகிறது. அந்த நாடு பாகிஸ்தானுடன் எல்லையை பகிர்ந்து கொண்டுள்ளது. அந்த எல்லை பகுதிகளில் தெக்ரிக்-இ-தலீபான் பாகிஸ்தான் என்ற அமைப்பு அடிக்கடி பாகிஸ்தான் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்கு பதிலடியாக பாகிஸ்தான் ராணுவம் தாக்குதல் நடத்துகிறது. சமீபத்தில் பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் தெக்ரிக்-இ-தலீபான் அமைப்பு நடத்திய தாக்குதலில் பாகிஸ்தானின் ராணுவ அதிகாரிகள் உள்பட பல வீரர்கள் கொல்லப்பட்டனர்.

இதற்கிடையே கடந்த 11, 12-ந்தேதிகளில் ஆப்கானிஸ்தானின் தலீபான் அமைப்பினரும், தெஹ்ரிக்-இ-தலீபான் பாகிஸ்தான் அமைப்பினரும் சேர்ந்து ஆப்கானிஸ்தான்-பாகிஸ்தான் எல்லையில் பயங்கர தாக்குதல் நடத்தினர். அதற்கு பதிலடியாக, ஆப்கானிஸ்தான் எல்லைக்குள் நுழைந்து, தலீபான் முகாம்கள், பயங்கரவாத பயிற்சி மையங்கள் மீது பாகிஸ்தான் ராணுவம் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் 23 பாகிஸ்தான் ராணுவத்தினர் உயிரிழந்தனர். 29 பேர் காயமடைந்தனர். அதே சமயம், 200-க்கும் மேற்பட்ட தலீபான்கள் கொல்லப்பட்டனர் என்று பாகிஸ்தான் ராணுவம் தெரிவித்தது.

இந்த நிலையில், ஆப்கானிஸ்தான்-பாகிஸ்தான் எல்லை அருகே அமைந்துள்ள பல்வேறு பகுதிகளில் தலீபான்கள் மீண்டும் தாக்குதல் நடத்தியுள்ளனர். அங்குள்ள கிராமங்கள் வழியாக புகுந்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது. இதனையடுத்து, இந்த தாக்குதல்களுக்கு தக்க பதிலடி கொடுக்கப்பட்டதாகவும், இதில் சுமார் 40 தலீபான்கள் கொல்லப்பட்டதாகவும் பாகிஸ்தான் ராணுவம் தெரிவித்துள்ளது. இந்த மோதல் சம்பவங்களால் ஆப்கானிஸ்தான்-பாகிஸ்தான் எல்லையில் பதற்றம் அதிகரித்துள்ளது.

# கென்யா முன்னாள் பிரதமர் கேரளாவில் மரணம்

**திருவனந்தபுரம், அக். 16-**

கென்யா முன்னாள் பிரதமர் ரைலா ஒடிங்கா கேரளாவில் மரணம் அடைந்தார்.

கிழக்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடு கென்யா. அந்நாட்டின் முன்னாள் பிரதமர் ரைலா ஒடிங்கா (வயது 80). இவர் 2008 முதல் 2013ம் ஆண்டு வரை கென்யாவின் பிரதமராக செயல்பட்டுள்ளார். இதனிடையே, உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்ட ரைலா ஒடிங்கா ஆயுர்வேத சிகிச்சை பெற கேரளாவுக்கு வந்துள்ளார். அவர் எர்ணாகுளத்தில் உள்ள ஆயுர்வேத சிகிச்சை மையத்தில் சிகிச்சை பெற்று வந்தார்.



இந்நிலையில், ரைலா ஒடிங்கா நேற்று காலை ஆயுர்வேத சிகிச்சை மையத்தில் நடைபயிற்சி செய்து கொண்டிருந்த போது திடீரென மயங்கி விழுந்தார். அவரை மீட்ட உடன் இருந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். ரைலா ஒடிங்காவை பரிசோதித்த டாக்டர்கள், அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக அறிவித்தனர். ரைலா ஒடிங்காவின் உடல் கென்யாவுக்கு கொண்டு செல்லப்பட உள்ளது.

# மீண்டும் அமெரிக்காவுக்கு தபால் பார்சல் சேவை

**புதுடெல்லி, அக். 16-**

இந்திய தபால் துறை அமெரிக்காவுக்கான அனைத்து வகை சர்வதேச தபால் சேவைகளையும் மீண்டும் தொடங்கியுள்ளது. இந்திய தபால் துறை நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் கூறி இருப்பதாவது:- இந்திய தபால் துறை அமெரிக்காவுக்கான அனைத்து வகை சர்வதேச தபால் சேவைகளையும் மீண்டும் தொடங்குகிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறது. அமெரிக்க சுங்க மற்றும் எல்லைப் பாதுகாப்பு வழிகாட்டுதல்களின் படி, புதிய கட்டண விதியின் கீழ் இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்கு அனுப்பப்படும் தபால் ஏற்றுமதிகளுக்கான அறிவிக்கப்பட்ட சரக்கு வரி மதிப்பில் 50 சதவீத சுங்க வரி கையில் அனுப்ப முடியும்.

கூரியர் அல்லது வணிக சரக்குகளைப் போல அல்லாமல், தபால் சேவை பொருட்களுக்கு கூடுதல் அடிப்படை அல்லது தயாரிப்பு சார்ந்த வரிகள் எதுவும் விதிக்கப்படுவதில்லை. இந்த சாதகமான வரி அமைப்பு ஏற்றுமதியாளர்களுக்கான ஒட்டுமொத்த செலவுச் சுமையை கணிசமாக குறைக்கிறது. இதனால் இந்த அஞ்சல் சேவையில் சிறுகுறு தொழில் செய்பவர்கள், கைவினைஞர்கள், சிறு வணிகர்கள் மற்றும் மின் வணிக ஏற்றுமதியாளர்கள் மிகவும் மலிவு விலையில் ஏற்றுமதி செய்து தொழில் வளர்ச்சியை பெருக்கிக் கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

கடந்த ஆகஸ்டு 25-ந் தேதிக்கு பின்னர், அமெரிக்காவுக்கு இந்திய தபால் துறையின் தபால், ஆவணங்கள் தவிர்த்த இதர சேவைகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டு இருந்தது. புதிய வரி விகிதம் மற்றும் ஒழுங்குமுறை தேவைகளுக்காக இந்த சேவை நிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### இஸ்ரேலுக்கு ஆதரவாக செயல்பட்டதாக

# ஆறு பாலஸ்தீனியர்கள் ஹமாஸ் ஆயுதக்குழுவால் சுட்டுக்கொலை

**காசா சிட்டி, அக். 16-**

இஸ்ரேலுக்கு ஆதரவாக செயல்பட்டதாக 6 பாலஸ்தீனியர்களை பொதுவெளியில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் சுட்டுக்கொன்றனர்.

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினருக்கும், இஸ்ரேலுக்கும் இடையே கடந்த 2 ஆண்டுகளாக போர் நீடித்து வந்தது. இந்த போரில் 67 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதனை தொடர்ந்து அமெரிக்கா தலைமையில் நடந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்பட்டு இரு தரப்பும் போர் நிறுத்தத்திற்கு சம்மதம் தெரிவித்துள்ளன.

இதையடுத்து, காசாவில் இருந்து இஸ்ரேல் படைகள் வெளியேறி வருகின்றன. தங்கள் வசம் இருந்த இஸ்ரேலிய பணய கைதிகளை ஹமாஸ் விடுதலை செய்துள்ளது. இந்நிலையில், 6 பாலஸ்தீனியர்களை ஹமாஸ் ஆயுதக்குழுவினர் காசா முனையில் பொதுவெளியில் வைத்து துப்பாக்கியால் சுட்டுக்கொன்றனர். தங்களுக்கு எதிராக இஸ்ரேலுடன் இணைந்து செயல்பட்டதாக குற்றஞ்சாட்டி பாலஸ்தீனியர்களை ஹமாஸ் ஆயுதக்குழுவினர் பொதுவெளியில் சுட்டுக்கொன்றனர்.

# தங்கம் விலை மேலும் உயர்வு

**சென்னை, அக். 16-**

சென்னையில் நேற்று ஆபரணத்தங்கம் விலை கிராமுக்கு ரூ.35 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.11,860-க்கும், சவரனுக்கு ரூ.280 உயர்ந்து, ஒரு சவரன் ரூ.94,880-க்கும் விற்பனையானது. வெள்ளி முதல்முறையாக கிலோவுக்கு ரூ.2 லட்சத்தை கடந்து புதிய உச்சத்தை தொட்டிருந்தது.


தங்கம் விலை கடந்த 3 நாட்களுக்கு முன் ஒரு கிராம் ரூ.11 ஆயிரத்து 580-க்கும், சவரன் ரூ.92 ஆயிரத்து 640-க்கும் விற்பனையானது. இந்தநிலையில் நேற்று முன்தினம் ரூ.245 அதிகரித்து கிராம் ரூ.11 ஆயிரத்து 825-க்கும், ரூ.1,960 அதிகரித்து ஒரு சவரன் ரூ.94 ஆயிரத்து 600-க்கும் விற்பனையானது. தங்கம் விலை சீரான இடைவெளியில் புதிய உச்சத்தை எட்டி பிடித்து வருகிறது. அந்தவகையில் நேற்றும் தங்கம் விலை முதல்முறையாக ரூ.94 ஆயிரத்தை தாண்டி வரலாறு படைத்து இருந்தது.

இந்நிலையில் நேற்று சென்னையில் ஆபரணத்தங்கம் விலை கிராமுக்கு ரூ.35 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.11,860-க்கும், சவரனுக்கு ரூ.280 உயர்ந்து, ஒரு சவரன் ரூ.94,880-க்கும் விற்பனையானது.

தங்கம் விலையை போன்றே வெள்ளி விலையும் உயர்ந்துகொண்டே செல்கிறது. கடந்த 3 நாட்களுக்கு முன் ஒரு கிராம் ரூ.197-க்கும், கிலோ ரூ.1 லட்சத்து 97 ஆயிரத்துக்கும் விற்பனையானது. நேற்று முன்தினம் ரூ.9 அதிகரித்து ஒரு கிராம் ரூ.206-க்கும், ரூ.9 ஆயிரம் உயர்ந்து ரூ.2 லட்சத்து 6 ஆயிரத்துக்கும் வெள்ளி விற்பனையாகியது. வெள்ளி முதல்முறையாக கிலோவுக்கு ரூ.2 லட்சத்தை கடந்து புதிய உச்சத்தை தொட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று வெள்ளி விலை மேலும் உயர்ந்து புதிய உச்சத்தை தொட்டுள்ளது. இதன்படி வெள்ளி விலை கிராமுக்கு ரூ.1-ம், கிலோவுக்கு ஆயிரம் ரூபாயும் உயர்ந்து, ஒரு கிராம் ரூ.207-க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 7 ஆயிரத்துக்கும் விற்பனையானது.

**16-10-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** உடன்பிறப்புகளால் அதிக உதவி உண்டு. கோவில், குளம் பணிகளில் ஈடுபடுவீர்கள். அனைத்திலும் எளிதில் வெற்றி கிடைக்கும். சுற்றுலாப் பயணங்கள் சென்று மகிழ்வீர்கள். தன்னம்பிக்கை கூடும்.

**ரிஷபம்:-** வழக்குகளை ஒத்திப் போடுவது நல்லது. அதிகாரிகளிடம் பணிவோடு நடந்தால் அனுகூலமான சூழல் நிலவும். வீட்டில் உள்ள விலை உயர்ந்த பொருட்களை பாதுகாப்பாக வைப்பது அவசியம்.

**மிதுனம்:-** இன்று, குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும். புதிய ஆடை அணிகலன்கள் வாங்குவீர்கள்., சாஸ்திர ஆராய்ச்சியும், அதில் தேர்ச்சியும் ஏற்படும். பெரியோர் பால் நேசம் ஏற்படும். தொழில் வளம் பெருகும்.

**கடகம்:-** இன்று, தனவரவு அதிகரிக்கும். எதிரிகள் அடிபணிவர். ஆரோக்கியம் மேம்படும். பயண சுகம் ஏற்படும். தனக்கெனத் தனி வீடு அமையும். குடும்பத்தில் சுபகாரியங்கள் குதுகலமாய் நிறைவேறும்.

**சிம்மம்:-** இன்று சுமாரான நாள். உங்கள் திறமைகள் அனைத்தையும் வெளிக்காட்டி வேலை செய்தாலும் ஏளனமே மிஞ்சும். பயணங்களின் போது விபத்து நேராவண்ணம் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

**கன்னி:-** தடைபட்ட காரியங்கள் கண்டு தன்னம்பிக்கை இழக்காதீர்கள். முயற்சியைக் கைவிடாதே தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றி துணிவுடன் செயல்களில் இறங்குங்கள்.

**துலாம்:-** அனைத்துச் செயல்களிலும் எளிதில் வெற்றி கிடைக்கும். உல்லாசமான சுற்றுலாப் பயணங்கள் ஆகியவை ஏற்படும். மனைவியின் உதவி பெற்று மகிழ்வீர்கள். தன்னம்பிக்கை கூடும்.

**விருச்சிகம்:-** கோபத்தால் குழப்பங்கள் ஏற்படலாம். மனைவியின் கலகத்தால், உறவுகளுக்குள் பகை ஏற்படும். அக்கம் பக்கத்தினருடன் அளவாகப் பழகுவது மற்றும். அதிகாரிகளிடம் பணிவாக நடத்தல் அவசியம்.

**தனுசு:-** குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும். சாத்திரங்களில் ஆராய்ச்சியும், தேர்ச்சியும் ஏற்படும். பெரியோர் பால் நேசம் ஏற்படும். தொழில் வளம் பெருகும். எதையும் துணிச்சலுடன் எதிர் கொள்வீர்கள்.

**மகரம்:-** பெண்களால் விரயச் செலவுகள் ஏற்படும். செலவைக் குறைக்க, புதிய பொருட்களை தேவைப்பட்டால் மட்டும் வாங்கவும். மாற்றங்கள் நிகழும். குறிக்கோளின்றி மனம் போன போக்கில் அலைய நேரும்.

**கும்பம்:-** கௌரவக் குறைவு ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்வது சிறப்பு. பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. துன்பம் வந்த போதினிலும் சிரிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

**மீனம்:-** அன்னையின் ஆரோக்கியத்தில் சிறப்பு கவனம் தேவை. தடைபட்ட காரியங்கள் கண்டு தன்னம்பிக்கை இழக்காதீர்கள். துணிவுடன் செயல்களில் இறங்குங்கள்.

### நாட்டின் முன்னேற்றத்திற்கு உழைப்பதே

# கலாமுக்கு மாணவர்கள் செலுத்தும் நன்றிக்கடன்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு

**சென்னை, அக். 16-**

திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை மாணவர்கள் நன்கு பயன்படுத்தி நாட்டின் முன்னேற்றத்திற்கு உழைப்பதே மாணவர்கள் கலாமுக்கு செலுத்தும் நன்றிக்கடன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜே.அப்துல் கலாமின் பிறந்தநாளையொட்டி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:- எப்படிப்பட்ட தடையையும் கல்வியைக் கொண்டு கடந்திடலாம், வாழ்வில் உயர்ந்திடலாம் என்று வாழ்ந்து காட்டிய அறிவியல் மேதை, முன்னாள் ஜனாதிபதி, பாரத ரத்னா அப்துல் கலாம் அவர்களின் பிறந்தநாள்.



உயர்கல்விக்காக நமது திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை நமது மாணவர்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டு, இந்தியாவின் முன்னேற்றத்துக்கும், தன்னிறைவுக்கும் உழைத்தால், அதுதான் அப்துல் கலாம் அவர்களுக்குச் செலுத்தும் மிகச்சிறந்த நன்றிக்கடன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# முன்பதிவு பெட்டிகளில் பயணிக்கும் வடமாநில பயணிகள் மீது நடவடிக்கை

### தெற்கு ரயில்வே அதிரடி உத்தரவு

**சென்னை, அக். 16-**

முன்பதிவு பெட்டிகளில் வட மாநில பயணிகள் பயணிப்பதையடுத்து அவர்களுக்கு தெற்கு ரயில்வே அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

தீபாவளி பண்டிகைக்கு திருப்பூரில் வாழும் வடமாநில தொழிலாளர்கள் பலரும் தங்கள் சொந்த ஊர்களுக்கு செல்ல தொடங்கியுள்ளனர்.

வடமாநிலத்தவர்கள் பலரும் குடும்பம் குடும்பமாக சொந்த ஊர்களுக்கு தங்களது குழந்தைகள் மற்றும் உடைமைகளுடன் ரயில்களில் சென்றுவருவதால், திருப்பூர் ரயில் நிலையத்தில் அளவுக்கு மீறிய கூட்டம் கடந்த 11-ம் தேதி முதல் காணப்படுகிறது.

இந்நிலையில், கேரளா மாநிலம் எர்ணாகுளத்தில் இருந்து பாட்னா செல்லும் விரைவு ரயில் திருப்பூர் ரயில் நிலையத்துக்கு வந்தது. அப்போது முன்பதிவு செய்யாமல் இருந்த பயணிகள் பலரும், முன்பதிவு ரயில் பெட்டிகளில் ஏறியதால், முன்பதிவு செய்து பயணித்து வந்த பயணிகள் பலரும் அவதி அடைந்தனர். முன்பதிவு பெட்டிகளில் துணி மூட்டைகள், பைகள் உள்ளிட்டவற்றுடன் ஏறியதால், முன்பதிவு பெட்டியில் பதிவு செய்து பயணித்த பயணிகள் கடும் அவதி அடைந்ததுடன், ரயில்வே துறை அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

மேலும் ரயில் பயணச்சீட்டு பரிசோதகரை முற்றுகையிட்டனர். இது தொடர்பாக பயணச்சீட்டு பரிசோதகர் உரிய பதில் அளிக்காத நிலையில் அதிருப்தி அடைந்தனர். முன்பதிவு பெட்டியில் அத்துமீறி பயணம் செய்யும் பயணிகள் தொடர்பாக சமூக வலைதளங்களில் வீடியோ பதிவிட்டு அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

இந்த நிலையில், ரயில்களில் வடமாநில பயணிகள் அத்துமீறி ஏறுவதை முறைப்படுத்த போலீசாருக்கு ரயில்வே உத்தரவிட்டுள்ளது. முன்பதிவு பெட்டிகளில் டிக்கெட் இன்றி பயணம் செய்வதை தீவிரமாக கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ரயில்வே போலீசாருக்கு தெற்கு ரயில்வே அறிவுறுத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது.

### இந்திய எல்லை பகுதிகளில்

# 200 பாக்., டிரோன்கள்-287 கிலோ போதைப்பொருட்கள் பறிமுதல்

**டெல்லி, அக். 16-**

இந்திய எல்லையில் இருந்து டிரோன் மூலம் கடத்த முயன்ற போதைபொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

இந்தியா- பாகிஸ்தான் எல்லையில் சமீப காலமாக அடிக்கடி எல்லை தாண்டி வரும் டிரோன்களால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது. இதையடுத்து பஞ்சாப் உள்ளிட்ட பாகிஸ்தானையொட்டி உள்ள மாநிலங்களின் 553 கிலோ மீட்டர் தூரத்துக்கு எல்லையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டது.

எல்லைப்பகுதிகள் விரிவுபடுத்தப்பட்டு பாதுகாப்பு படை வீரர்கள் 24 மணி நேரமும் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். கடத்தல் காரர்கள் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகள் தரை மற்றும் வான்வழி மூலம் நவீன கருவிகள் மூலம் கண்காணிக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகளால் இந்த ஆண்டு இதுவரை பாகிஸ்தானில் இருந்து அத்துமீறி இந்திய எல்லைக்குள் வந்த 200 டிரோன்கள் இடைமறிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் டிரோன்கள் மூலம் அனுப்பப்பட்ட போதைப் பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டது.

இதுதொடர்பாக எல்லைப்பாதுகாப்பு படை செய்தி தொடர்பாளர் கூறியதாவது:-

இந்த ஆண்டு இதுவரை இல்லாத வகையில் 16 பாகிஸ்தானியர்கள் உள்பட 219 கடத்தல்காரர்களை எல்லைப்பாதுகாப்பு படை வீரர்கள் பிடித்துள்ளனர். பாகிஸ்தானில் இருந்து வந்த 200 டிரோன்கள் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளது.

மேலும் 287 கிலோ ஹெராயின், 13 கிலோ மெத்தம் பெட்டமைன் போதைப் பொருள்,174 ஆயுதங்கள், 12 கையெறி குண்டுகள், 10 கிலோவுக்கும் அதிகமான உயர் ரக வெடி பொருட்கள் உள்ளிட்டவைகள் கைப்பற்றப்பட்டு உள்ளன. எல்லை தாண்டிய குற்றங்களில் ஈடுபட்ட 203 இந்திய கடத்தல் காரர்கள் மற்றும் 16 பாகிஸ்தானியர்கள் கைது செய்யப்பட்டு உள்ளனர். இதன் மூலம் பாகிஸ்தான் ஊடுருவல் காரர்கள் தடுக்கப்பட்டு உள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

கடந்த ஆண்டு (2024) 294 டிரோன்கள் மற்றும் 294 கிலோ போதைப்பொருட்கள் இந்தியா- பாகிஸ்தான் எல்லையில் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் 30 பாகிஸ்தானியர்கள் உள்பட 191 கடத்தல் காரர்கள் கைது செய்யப்பட்டனர். இந்த ஆண்டு கடத்தல் காரர்களின் கைது எண்ணிக்கை அதிகரித்து உள்ளது.

# வங்காளதேசத்தில் ஜவுளி ஆலையில் தீ விபத்து; 16 தொழிலாளர்கள் பலி

**டாக்கா, அக். 16-**

வங்காளதேசத்தில் ஜவுளி ஆலையில் பயங்கர தீ விபத்தில் 16 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

வங்காளதேச தலைநகர் டாக்காவில் ரூப்நகர் பகுதியில் வங்காளதேச வர்த்தக பல்கலைக்கழகத்துக்கு எதிரே ஒரு ரசாயன கிடங்கும், அதன் அருகே 4 மாடிகள் கொண்ட ஜவுளி ஆலையும் இயங்கி வருகின்றன.

இந்நிலையில், நேற்று முன்தினம் உள்ளூர் நேரப்படி காலை 11 மணியளவில், ரசாயன கிடங்கில் ரசாயன பொருட்கள் வெடித்தன. அதனால் தீவிபத்து ஏற்பட்டது.அருகில் உள்ள ஜவுளி ஆலைக்கும் தீ பரவியது. 4 மாடிகளிலும் தீப்பிடித்துக் கொண்டது. தகவல் அறிந்து 12 தீயணைப்பு வாகனங்கள் விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டன. நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தன.

அதன்பிறகு ஜவுளி ஆலையில் சோதனை நடத்தியபோது, 16 உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. அவர்கள் அனைவரும் ஜவுளி ஆலை தொழிலாளர்கள் ஆவர். ஆனால் அவர்கள் அடையாளம் காணப்படவில்லை. ரசாயன கிடங்கில் இருந்து உருவான விஷ வாயுவை சுவாசித்ததால் அவர்கள் உயிரிழந்ததாக தீயணைப்புத்துறை அதிகாரி முகமது தஜுல் இஸ்லாம் சவுத்ரி தெரிவித்தார். ரசாயன கிடங்கில் ஏற்பட்ட வெடிவிபத்துக்கான காரணம், விசாரணைக்கு பிறகு தெரிய வரும் என்றும் அவர் கூறினார். மேலும் சில தொழிலாளர்கள் காயம் அடைந்தனர். அவர்கள் டாக்கா ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். வங்காளதேச தலைமை ஆலோசகர் முகமது யூனுஸ் பலியானோர் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### கரூர் துயர சம்பவத்தில்

# எந்த ஒரு தனிநபர் மீதும் பழிசுமத்தும் நோக்கம் இல்லை: முதல்வர் ஸ்டாலின்

**சென்னை, அக். 16-**

கரூர் துயர சம்பவத்தில் எந்த ஒரு தனிநபர் மீதும் பழி சுமத்திப் பலிகடா ஆக்குவது நோக்கம் இல்லை என்று தெரிவித்துள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின். அரசு மீது பொய்களைச் சிலர் பரப்பும் போது, நடந்த உண்மையை விளக்க வேண்டியது கடமையாகிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:- கரூரில் நிகழ்ந்த பெருந்துயரம் தொடர்பாக எந்த ஒரு தனிநபர் மீதும் பழி சுமத்திப் பலிகடா ஆக்குவது நமது நோக்கம் இல்லை. எனினும், திட்டமிட்டு அரசு மீது பொய்களைச் சிலர் பரப்பும்போது, நடந்த உண்மையை விளக்க வேண்டியது கடமையாகிறது.

இனி இப்படி நிகழாமல் தடுப்பதற்கான 'நிலையான வழிகாட்டு நெறிமுறை'களை அரசு வகுத்து வருகிறது. சுப்ரீம் கோர்ட் இறுதித் தீர்ப்பின் அடிப்படையில் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம். அனைத்தையும் விட மனித உயிர்களே விலைமதிப்பற்றது என்ற பொறுப்புணர்வுடன் அனைத்துத் தரப்பினரும் செயல்படுவோம்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

### கரூர் கூட்ட நெரிசல் சம்பவம்:

# அ.தி.மு.க.விற்கு முதல்வர் பாராட்டு

**சென்னை, அக். 16-**

கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் நடந்த அதே இடத்தில் அதற்கு இரு தினங்களுக்கு முன்பு நடைபெற்ற அ.தி.மு.க. பிரச்சார கூட்டம், முறையாக ஒருங்கிணைக்கப்பட்டு கட்டுப்பாட்டோடு நடைபெற்றதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு தெரிவித்தார்.

கரூர் வேலுசாமிபுரத்தில் த.வெ.க. சார்பில் நடைபெற்ற பிரச்சார கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த நிலையில், அந்த சம்பவம் தொடர்பாக முதல்வர் மு.க. ஸ்டாலின் சட்டப்பேரவையில் விளக்கம் அளித்தார்.

அப்போது, த.வெ.க. நடத்திய பிரச்சார கூட்டத்தையும் அதற்கு இரு தினங்களுக்கு முன்பு அ.தி.மு.க. நடத்திய பிரச்சார கூட்டத்தையும் ஒப்பிட்டுப் பேசினார். அவர் தனது உரையில், கூட்ட நெரிசம் சம்பவம் நடந்த அதே வேலுசாமிபுரத்தில் அதற்கு இரு தினங்களுக்கு முன்பாக அதாவது செப்.25ம் தேதி எதிர்க்கட்சித் தலைவரின் பரப்புரை நடந்தது.

அந்த கூட்டத்தில் பங்கேற்றவர்கள் முறையாக ஒருங்கிணைக்கப்பட்டு கட்டுப்பாட்டோடு நடந்து கொண்டனர். எந்தவித அசம்பாவிதமும் இல்லாமல் நடந்து முடிந்தது. அதில் சுமார் 12,000 முதல் 15,000 வரை பங்கேற்றிருக்கிறார்கள். அந்த பரப்புரைக்கூட்டத்திற்கு சுமார் 137 காவலர்கள், 30 ஊர்க்காவல்படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். ஆனால், அதற்கு நேர் மாறாக இந்த கட்சியினுடைய நிகழ்ச்சி நடந்துள்ளது" என தெரிவித்துள்ளார்.

# கலாம் கனவு கண்ட இந்தியாவை கட்டியெழுப்புவோம்: பிரதமர்

**டெல்லி, அக். 16-**

அப்துல்கலாம் கனவு கண்ட இந்தியாவை கட்டியெழுப்புவோம் என்று பிரதமர் மோடி பேசினார்.

ராமேசுவரத்தில் எளிய குடும்பத்தில் பிறந்து இந்தியாவின் உயரிய பதவியான குடியரசு தலைவர் பதவியை அலங்கரித்தவர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம். இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் (இஸ்ரோ), இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மையம் ஆகியவற்றின் தலைமை விஞ்ஞானியாக இருந்து ஏவுகணை திட்டங்களை திறம்பட செயல்படுத்தியதன் இந்தியாவின் ஏவுகணை நாயகனாக அறியப்படுகிறார். அவருக்கு இளைஞர்கள்,



மாணவர்கள் மீது மிகுந்த ஈடுபாடு இருந்தது. இதனால் அவர்களோடு உரையாடி வந்தார்.

நேற்று ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. இதனையொட்டி பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:-

டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் பிறந்தநாளில் அவரை நினைவு கூர்வோம். இளைஞர்களை தூண்டி, நம் தேசத்தைப் பெரிய கனவு காணத் தூண்டிய தொலைநோக்கு பார்வையாளராக அவர் நினைவு கூரப்படுகிறார். வெற்றிக்கு பணிவும் கடின உழைப்பும் மிக முக்கியம் என்பதை அவர் வாழ்க்கை நமக்கு நினைவூட்டுகிறது. அவர் கனவு கண்ட இந்தியாவை... வலிமையான, தன்னம்பிக்கை கொண்ட மற்றும் இரக்கமுள்ள இந்தியாவை நாம் தொடர்ந்து கட்டியெழுப்புவோம்" என்று பதிவிட்டுள்ளார்.

# எங்கள் கட்சிக்கு அனுமதி மறுத்த இடத்தில் த.வெ.க.வுக்கு அனுமதி

## சட்டசபையில் இ.பி.எஸ். குற்றச்சாட்டு

**சென்னை, அக். 16-**

எங்கள் கட்சிக்கு அனுமதி மறுத்த இடத்தில் த.வெ.க.வுக்கு அனுமதி கொடுத்தனர் என எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டாக கூறினார்.



தமிழக சட்டசபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் குறித்து விளக்கம் அளித்து பேசினார். இந்நிலையில், முழுமையான பாதுகாப்பு கொடுத்திருந்தால் அசம்பாவிதம் ஏற்படாமல் தவிர்த்திருக்கலாம். முன்னெச்சரிக்கை நடவடிக்கையை எடுக்க அரசு தவறிவிட்டது என சட்டசபையில் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி கூறினார். சில விசயங்களை குறிப்பில் இருந்து நீக்கும்படியும் கோரினார். இதனால், இரு கட்சி உறுப்பினர்கள் இடையே காரசார விவாதம் ஏற்பட்டது. அப்போது, அ.தி.மு.க. உறுப்பினர்கள் தரையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும், அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் தொடர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். சபாநாயகரை கண்டித்து அ.தி.மு.க. உறுப்பினர்கள் கோஷம் எழுப்பினர். இதனையடுத்து, அவர்கள் சட்டசபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர். இதனை முன்னிட்டு, சட்டசபை வளாகத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்பும் போடப்பட்டு இருந்தது.

சட்டசபையில் இருந்து வெளிநடப்பு செய்த பின்னர் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டார். அவர் பேசும் போது, அவையில் பேச எங்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. நாங்கள் கருத்து கூறிய பின்னர் முதல்வர் பதிலளிக்க வேண்டும் என நாங்கள் கோரிக்கை விடுத்தோம். கரூர் சம்பவத்தில் ஏதோ மர்மம் இருக்கிறது என்றார்.

ஆளுங்கட்சிக்கு ஏன் இவ்வளவு பதற்றம்? நாங்கள் அரசியல் செய்கிறோமா? என்றும் கேட்டுள்ளார். நாங்கள் அரசியல் செய்யவில்லை. மக்களுக்காகவே பேசுகிறோம் என்றும் கூறினார். கரூர் கூட்டத்திற்கு, இதற்கு முன்பு கூடிய கூட்டத்திற்கு ஏற்ப, அரசு இடம் ஒதுக்கியிருக்க வேண்டும். அரசின் அலட்சியமே காரணம். கரூர் துயர சம்பவத்திற்கு பாதுகாப்பு குறைபாடே காரணம். கரூர் கூட்டத்திற்கு போதிய பாதுகாப்பு வழங்கவில்லை. அசம்பாவிதம் நடக்க வேண்டும் என திட்டமிட்டே இந்த இடம் ஒதுக்கியுள்ளனர்.

பிரேத பரிசோதனையில் ஏன் இவ்வளவு அவசரம்? என கேள்வி எழுப்பிய அவர், உடல் ஒன்றை பிரேத பரிசோதனை செய்ய ஒன்றரை மணிநேரம் ஆகும் என்று கூறினார். ஒரு நபர் ஆணையம் உண்மையை மறைக்கும் முயற்சி. எங்கள் கட்சிக்கு அனுமதி மறுத்த இடத்தில் த.வெ.க.வுக்கு அனுமதி கொடுத்தனர். காவல் துறை கடுமையான பாதுகாப்பு கொடுக்காததும் 41 பேர் உயிரிழப்புக்கு காரணம் என குற்றச்சாட்டாக கூறினார். சி.பி.ஐ. விசாரணையை நினைத்து அவர்கள் பயப்படுகின்றனர். சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டு, சுப்ரீம் கோர்ட் நடுநிலையோடு நல்ல தீர்ப்பை வழங்கியுள்ளது என்றும் கூறினார்.

# கருப்பு பட்டை அணிந்து வந்த அ.தி.மு.க. உறுப்பினர்கள்..!

**சென்னை, அக். 16-**

சட்டசபை கூட்டத்திற்கு நேற்று அ.தி.மு.க. உறுப்பினர்கள் கருப்பு பட்டை அணிந்து வந்திருந்தனர்.

தமிழக சட்டசபை கூட்டம் நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு கூடியது. கூட்டம் தொடங்கியதும் திருக்குறள் வாசிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து, மறைந்த முன்னாள் உறுப்பினர்கள் 8 பேர் மறைவுக்கு இரங்கல் குறிப்பு வாசிக்கப்பட்டது. தொடர்ந்து, 2 மணித்துளிகள் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதன்பின்னர், கரூரில் நடைபெற்ற துயர சம்பவத்தில் 41 பேர் உயிரிழந்த சம்பவத்துக்கு இரங்கல் தெரிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிலையில், நேற்று 2-ம் நாள் தமிழக சட்டசபை கூட்டம் கூடியுள்ளது.

இந்த கூட்டத்தில் அ.தி.மு.க. உறுப்பினர்கள் கருப்பு பட்டை அணிந்து வந்தனர். கரூர் சம்பவத்தில் உயிரிழந்தோருக்கு இரங்கல் தெரிவிக்கும் விதமாக கருப்பு பட்டை அணிந்து வந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

# த.வெ.க. சார்பில் நினைவேந்தல் கூட்டம் நடத்த விஜய் உத்தரவு

**சென்னை, அக். 16-**



கரூரில் கூட்ட நெரிசலில் உயிரிழந்த 41 பேருக்கு தமிழக வெற்றிக் கழகம் சார்பில் நினைவேந்தல் கூட்டம் நடத்த வேண்டும் என விஜய் உத்தரவிட்டுள்ளார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் அந்தந்த மாவட்டங்களில் நினைவேந்தல் கூட்டம் நடத்த வேண்டும் என விஜய் உத்தரவிட்டுள்ளார். மேலும், 41 பேரில் படங்களுக்கு மலர்தூவியும், மெழுகுவர்த்தி ஏந்தியும் மவுன அஞ்சலி செலுத்த வேண்டும் என நிர்வாகிகளுக்கு விஜய் உத்தரவிட்டுள்ளார்.

# தேர்தலில் போட்டியிட மாட்டேன்: பிரசாந்த் கிஷோர் திட்ட வட்டம்

**புதுடெல்லி, அக். 16-**

நடைபெறவிருக்கும் பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் நான் போட்டியிட மாட்டேன். கட்சிப் பணிகளில் கவனம் செலுத்த இருக்கிறேன் " என ஜன்சுராஜ் கட்சியின் வேட்பாளர் பிரசாந்த் கிஷோர் தெரிவித்துள்ளார்.



பீகார் சட்டப்பேரவைத் தேர்தல் வரும் நவம்பர் 6 மற்றும் 11 என இரண்டு கட்டங்களாக நடைபெற உள்ளது. முதல் கட்டத் தேர்தலின் போது 121 தொகுதிகளுக்கும். 2-ம் கட்டத் தேர்தலின்போது 122 தொகுதிகளுக்கும் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. இந்தத் தேர்தலில், பாஜக - ஐக்கிய ஜனதா தளம் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியும், ராஷ்ட்ரிய ஜனதா தளம் - காங்கிரஸ் தலைமையிலான மகாகட்பந்தன் கூட்டணியும் பிரதான போட்டியாளர்களாக களத்தில் உள்ளன.

இம்முறை பீகார் சட்டப்பேரவை தேர்தல் சற்று சூடு பிடிக்கும் என்று கருதப்படுகிறது. தேர்தல் வியூக அமைப்பாளராக இருந்து, அரசியல்கட்சி தலைவராக பிரவேசம் எடுத்துள்ள பிரசாந்த் கிஷோர் ஜன்சுராஜ் கட்சியின் தலைவராக உள்ளார். தனது சொந்த தொகுதியான கர்கஹார் அல்லது ரகோபூர் தொகுதியில் போட்டியிடப் போவதாக முன்பு அறிவித்திருந்தார். ஆனால், தற்போது ராகோபூர் தொகுதிக்கு ஜன் சுராஜ் கட்சி சஞ்சல் சிங்கை வேட்பாளராக அறிவித்துள்ளது கவனிக்கத்தக்கது. ரகோபூர் தொகுதி என்பது தேஜஸ்வி யாதவை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆர்ஜேடி கோட்டை. இங்கு அவர் போட்டியிட்டிருந்தாலும் கடுமையான போட்டியை எதிர்கொண்டிருப்பார் என கூறப்படுகிறது.

இந்த நிலையில் அவர் தனது கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் பட்டியலை வெளியிட்டார். பின்னர், இது தொடர்பாக பிரசாந்த் கிஷோர் அளித்த பேட்டியில், வரவிருக்கும் தேர்தலில் நான் போட்டியிடவில்லை. கட்சி பணிகளில் கவனம் செலுத்த இருக்கிறேன். அனைத்து தொகுதிகளிலும் ஜன்சுராஜ் வேட்பாளர்களை ஆதரித்து தீவிர பிரச்சாரம் மேற்கொள்ளப் போகிறேன். பீகாரில் தேசிய ஜனநாயக கூட்டணி தோல்வியை தழுவும். அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வரமாட்டார்கள். நிதிஷ்குமார் தலைமையிலான ஐக்கிய ஜனதா தளம் 25 இடங்களில் வெற்றி பெறுவதற்கு கூட கடுமையாக போராட வேண்டியதாக இருக்கும். நிதிஷ்குமார் மீண்டும் முதல்வராக வர வாய்ப்பில்லை. இண்டியா கூட்டணியின் நிலைமையும் தற்போது சரியாக இல்லை.

ராஷ்ட்ரீய ஜனதா தளம் மற்றும் காங்கிரஸுக்கு இடையே தொகுதிப் பங்கீட்டில் மோதல் ஏற்பட்டுள்ளது. நாங்கள் குறைந்தது 150 இடங்களை வெல்ல இலக்கு நிர்ணயித்துள்ளோம். அதற்கும் குறைவான இடங்களில் வென்றாலும் அது எங்களுக்கு தோல்விதான்''

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கரூர் கூட்ட சம்பவ உடற்கூராய்வில் சந்தேகம் கிளப்புவது ஏற்புடையதல்ல

## சட்டசபையில் மா.சுப்பிரமணியன் விளக்கம்

**சென்னை, அக். 16-**

உடற்கூராய்வு செய்யப்பட்ட நிகழ்வு முழுவதும் வீடியோ பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் எந்த ஒளிவு மறைவும் இல்லை. உடற்கூராய்வில் சந்தேகம் கிளப்புவது ஏற்புடையதல்ல என்று எடப்பாடி பழனிசாமி கேள்விக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதில் அளித்துள்ளார்.

கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் குறித்து சட்டசபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம் அளித்து பேசினார். அப்போது அவர், கரூர் பிரசாரத்திற்கு 11 நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டது. அங்கு கூட்ட ஏற்பாட்டாளர்கள் சில முக்கிய ஏற்பாடுகளை செய்ய வேண்டும். ஆனால், அவர்கள் போதிய ஏற்பாடுகளை செய்ய தவறி விட்டனர். காத்திருந்த மக்களுக்கு போதிய குடிநீர் இல்லை. உணவு வழங்க எந்த ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. இயற்கை உபாதைகளை கழிக்க பெண்களால் வெளியில் செல்ல முடியவில்லை என கூறினார்.

இதனை தொடர்ந்து பேசிய எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி, கரூர் கூட்ட நெரிசலில் சென்ற ஆம்புலன்ஸ் வாகனங்களில் தி.மு.க ஸ்டிக்கர் வந்தது எப்படி? அரசியல் செய்வது யார்? நள்ளிரவு நேரத்தில் பிரேத பரிசோதனை நடைபெற்றது ஏன்? என்ன அவசரம்? 39 பேரின் உடல்கள் காலை 8 மணிக்குள்ளாக பிரேத பரிசோதனை செய்யப்பட்டது ஏன்? என்று பல்வேறு அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பினார்.

இதற்கு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் விளக்கம் அளித்து கூறியதாவது:- இறந்தவர்கள் குடும்பத்தாரின் மனநிலையை கருத்தில் கொண்டு மனிதநேய அடிப்படையில் விரைவாக உடற்கூராய்வுகள் நடைபெற்றது. 28-ம் தேதி நள்ளிரவு 1.45 மணி அளவில் உடற்கூராய்வு செய்யும் பணிகள் தொடங்கின. உடற்கூராய்வு செய்யப்பட்ட நிகழ்வு முழுவதும் வீடியோ பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் எந்த ஒளிவு மறைவும் இல்லை. உடற்கூராய்வில் சந்தேகம் கிளப்புவது ஏற்புடையதல்ல என்றார்.

# சேலம் கிழக்கு த.வெ.க. மாவட்ட செயலாளர் ஜாமீன் மனு தள்ளுபடி

**கரூர், அக். 16-**

சேலம் கிழக்கு த.வெ.க. மாவட்ட செயலாளர் ஜாமீன் மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

கரூரில் த.வெ.க. பிரசாரத்தின் போது ஆம்புலன்ஸ் வாகனத்திற்கு இடையூறு செய்ததாக சேலம் கிழக்கு த.வெ.க. மாவட்ட செயலாளர் வெங்கடேசன் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கின் அடிப்படையில் வெங்கடேசனை போலீசார் கைது செய்தனர்.

நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட வெங்கடேசனை 23 ஆம் தேதி வரை சிறையில் அடைக்க கோர்ட்டு உத்தரவிட்டது. இதையடுத்து திருச்சி சிறையில் அடைக்கப்பட்டுள்ள வெங்கடேசன், தனக்கு ஜாமீன் வழங்கக் கோரி கரூர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனுவை விசாரித்த கரூர் நீதிமன்றம் ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

# தீபாவளிக்கு டாஸ்மாக் மது விற்பனை 500 கோடி ரூபாயை தாண்ட வாய்ப்பு..!

**சென்னை, அக். 16-**

தீபாவளிக்கு டாஸ்மாக் மது விற்பனை ரூ.500 கோடியை தாண்ட வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.




தீபாவளி பண்டிகை வருகிற 20-ந்தேதி கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு தீபாவளி பண்டிகை திங்கட்கிழமை வருவதால் அதற்கு முந்தைய 2 நாட்களும் விடுமுறை தினங்கள் ஆகும். டாஸ்மாக் கடைகளில் இந்த ஆண்டு தீபாவளியையொட்டி அதிக அளவில் மது விற்பனை நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதையொட்டி தீபாவளி பண்டிகை கால தேவையை பூர்த்தி செய்யும் வகையில் போதுமான மதுபானங்களை கையிருப் பில் வைக்க டாஸ்மாக் நிர்வாகம் அதன் அனைத்து மாவட்ட மேலாளர்களுக்கும் உத்தரவிட்டுள்ளது. இதுகுறித்து டாஸ்மாக் நிறுவன மூத்த அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

தீபாவளி பண்டிகையை யொட்டி தொடர் விடுமுறைகள் வருவதால் சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய 3 நாட்களிலும் மதுபானங்கள் தேவை சீராக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் என்பதால் முக்கியமான இடங்களில் கூடுதல் மதுபானங்களை இருப்பு வைக்க திட்டமிட்டுள்ளோம். முக்கியமாக பீர் வகைகள் அதிக அளவில் இருப்பு வைக்கப்படும். தற்போது டாஸ்மாக் கடைகளில் 10-க்கும் மேற்பட்ட பீர் வகைகள் விற்கப்படுகின்றன. அவற்றில் 5 முதல் 7 வகையான பீர்கள் வேகமாக விற்பனையாகின்றன. அந்த 7 வகை பானங்களும் கையிருப்பில் இருப்பதை கண்காணிக்க மாவட்ட மேலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது தினமும் சராசரியாக டாஸ்மாக் கடைகளில் ரூ.140 கோடி முதல் ரூ.150 கோடி வரை விற்பனை நடைபெறுகிறது. வார இறுதி நாட்களில் விற்பனை பொதுவாக 30 சதவீதம் முதல் 40 சதவீதம் வரை அதிகரிக்கும். பண்டிகை காலங்களில், வழக்கமாக 15 சதவீதம் கூடுதல் வருமானம் கிடைக்கும். கடந்த 2023-ம் ஆண்டு தீபாவளி பண்டிகையின் போது 3 நாட்களில் ரூ.460 கோடிக்கு மதுபானங்கள் விற்பனை நடந்தது. கடந்த 2024-ம் ஆண்டு 2 நாட்களில் ரூ.438 கோடிக்கு விற்பனை நடைபெற்றது. இந்த ஆண்டு தீபாவளிக்கு டாஸ்மாக் மது விற்பனை ரூ.500 கோடியை தாண்ட வாய்ப்புள்ளது.

டாஸ்மாக்கின் தினசரி வருவாயில் சென்னை, திருச்சி, கோவை உள்ளிட்ட முக்கிய நகரங்கள் கிட்டத்தட்ட 40 சதவீதம் பங்களிக்கின்றன. விடுமுறை நாட்களில் சுற்றுலா தலங்களில் விற்பனை அதிகமாக நடைபெறுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

### கரூர் நெரிசல் சம்பவத்தை எடுத்த அ.தி.மு.க.வினர்:

# துப்பாக்கிச்சூடு சம்பவத்தை சுட்டிக்காட்டிய அமைச்சர்கள்

**சென்னை, அக். 16-**

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவத்தை சுட்டிக் காட்டி அமைச்சர்கள் பேசிய தாவல் அ.தி.மு.க.வினர் வெளிநாடப்பு செய்தனர்.

தமிழ்நாடு சட்டசபையின் 2-ம் நாள் அமர்வு நேற்று தொடங்கியது. முதலில் உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு துறை சார்ந்த அமைச்சர்கள் பதில் அளித்தனர். இதனை தொடர்ந்து கரூரில் கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்த சம்பவம் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம் அளித்து பேசினார்.

இதனை தொடர்ந்து பேசிய எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி, கரூர் கூட்ட நெரிசலில் சென்ற ஆம்புலன்ஸ் வாகனங்களில் தி.மு.க ஸ்டிக்கர் வந்தது எப்படி? அரசியல் செய்வது யார்? என்று அடுக்கடுக்கான கேள்விகளை முன்வைத்தார். இதற்கு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் விளக்கம் அளித்தார்.

இதற்கிடையே, கரூர் கூட்ட நெரிசல் தொடர்பாக விவாதித்தபோது. தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவத்தை சுட்டிக்காட்டி அமைச்சர்கள் பேசினர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அ.தி.மு.க.வினர் அமளியில் ஈடுபட்டனர். அ.தி.மு.க. உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதை தொடர்ந்து, அ.தி.மு.க.வுக்கு ரத்த அழுத்தம் அதிகரித்துள்ளதாக சபாநாயகர் அப்பாவு பேசினார்.

அமளியில் ஈடுபட்ட அ.தி.மு.க.வினர் எதை எதை நீக்க வேண்டும் என்று இருக்கையில் அமர்ந்து சொல்லுங்கள் என்று துரைமுருகன் கூறினார். இருப்பினும், சபாநாயகர் இருக்கையின் முன்பு தர்ணாவில் ஈடுபட்ட எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட அ.தி.மு.க.வினர் சட்டசபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

# தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கூடுதல் சிறப்பு ரயில்கள் அறிவிப்பு

**சென்னை, அக். 16-**

தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

தீபாவளி பண்டிகையின் போது பயணிகளின் கூட்ட நெரிசலை தவிர்க்க பின்வரும் சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் சென்னை சென்ட்ரல் - போத்தனூர் (வண்டி எண்: 06049/06050) சென்னை சென்ட்ரலில் இருந்து அக்டோபர் 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் இரவு 11.35 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில், மறுநாள் காலை 9.30 மணிக்கு போத்தனூர் சென்றடையும். மறுமார்க்கத்தில் போத்தனூரில் இருந்து அக்டோபர் 18-ம் தேதி மதியம் 2 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில், இரவு 11.10 மணிக்கு சென்னை சென்ட்ரல் வந்தடையும்.

மேலும், போத்தனூரில் இருந்து (வண்டி எண்: 06100 ) அக்டோபர் 21-ம் தேதி இரவு 11.50 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில், மறுநாள் காலை 9.30 மணிக்கு சென்னை வந்தடையும். தாம்பரம் - கன்னியாகுமரி (வண்டி எண்: 06133) தாம்பரத்தில் இருந்து அக்டோபர் 16 மற்றும் 18 ஆகிய தேதிகளில் இரவு 11.30 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில், மறுநாள் 1.25 மணிக்கு கன்னியாகுமரிக்கு சென்றடையும். கன்னியாகுமரி-செங்கல்பட்டு (வண்டி எண்: 06134) கன்னியாகுமரியில் இருந்து அக்டோபர் 17-ம் தேதி மதியம் 3.35 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில், மறுநாள் காலை 4.30 மணிக்கு செங்கல்பட்டு வந்துசேரும். இந்த சிறப்பு ரயில்களுக்கான முன்பதிவு தொடங்கியதாகஅதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



பா.ஜ.க. அரசின் புதிய தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி விதிகள் அதிர்ச்சி அளிப்பதோடு, அவை மக்களுக்கு எதிரானவை. லட்சக்கணக்கானோர் ஏற்கனவே வேலை இழப்புகள் மற்றும் அதிகரித்து வரும் செலவுகளால் போராடி வரும் நிலையில், இந்த முடிவு மத்திய அரசுக்கு இந்திய மக்கள் மீது அக்கறை இல்லாததைக் காட்டுகிறது.

- கனிமொழி




நடிகர் விஜய் முதலில் தன்னைத் தான் பாதுகாத்துக் கொண்டார். தலைமறைவாக இருந்த த.வெ.க.வை சேர்ந்தவர்கள், சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்கு பின் இப்போது வெளியே வருவது மட்டுமல்ல, நீதி வெல்லும் என்று சொல்கிறார்கள். முதலில் சிரிப்பது முக்கியமல்ல, இறுதியில் யார் சிரிக்கிறார்கள், யார் உணர்கிறார்கள் என்பதுதான் முக்கியம்.

- கி.வீரமணி



பருவமழை தீவிரமடையத் தொடங்கியிருக்கும் நிலையில், நெல் கொள்முதல் நிலையங்களில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதோடு, தற்காலிக கொள்முதல் நிலையங்களை அமைத்துத் தேங்கியிருக்கும் நெல் மூட்டைகளை முழுமையாகக் கொள்முதல் செய்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திட வேண்டும்.

- டி.டி.வி.தினகரன்



ஏழை மாணவர்கள் கல்வி கற்பதற்கு ஒரே ஆதாரம் இருப்பது கல்வி உதவித் தொகைகள் தான். இதை உணர்ந்து அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் எம்.பி.ஏ. 2-ம் ஆண்டு பயிலும் மாணவர்கள் உள்பட இதுவரை கல்வி உதவித் தொகை வழங்கப்படாத அனைத்து மாணவர்களுக்கும் உடனடியாக கல்வி உதவித் தொகை வழங்க வேண்டும்.

- அன்புமணி

# திமுகவை எந்த கொம்பனாலும் தொட்டுகூடபார்க்க முடியாது

## பகுதி செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் பேச்சு



**திருவொற்றியூர் அக்.16**

வடசென்னை மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் பகுதி கழக செயலாளர் வை.ம. அருள்தாசன் ஏற்பாட்டில் அஜாக் மெட்ரோ ரயில் நிலையம் அருகில் உள்ள வி.கே. திருமண மாளிகையில் நடைபெற்ற பாக முகவர்கள் ஒருங்கிணைப்பாளர்கள்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ.பங்கேற்று ஆலோசனைகள் வழங்கினார்.

இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்து உரையாற்றிய பகுதி கழக செயலாளர்வை.ம அருள்தாசன் திராவிட முன்னேற்ற கழகம் எதற்காகவும் அஞ்சுகிற இயக்கம் இல்லை என்றும் எல்லாநிலையிலும் மக்களுக்காக பணியாற்றுகிற பாடுபடுகிற இயக்கம் திமுக என்றுகூறினார் மேலும் தனது தந்தையார் மறைந்த வட்ட கழகசெயலாளர் முன்னாள் கவுன்சிலர் மகாவிஷ்ணு பல்வேறு காலகட்டங்களில் கழகத்திற்காக இயக்கத்திற்காக எதற்கும்அஞ்சாமல் சிறை சென்ற வரலாறுகளை எடுத்துக் கூறி , அதே போன்று வரலாறுதான் மாவட்ட கழக செயலாளருக்கும், சட்டமன்ற உறுப்பினருக்கும் இங்கே இருக்கிற ஒவ்வொரு திமுக தொண்டனுக்கும் தியாக வரலாறுகள் உண்டுஎன்றும் ,வேறு எந்த இயக்கத்திற்கும் இந்தவரலாறுகள் கிடையாது. புதிதாக முளைத்திருக்கிற கட்சிகளாக இருந்தாலும் சரி இருக்கின்ற பழையகட்சிகளாகஇருந்தாலும் சரிஎல்லோரும் தனித்தனியாக எதிர்த்தாலும் சரி,ஒன்றாக எதிர்த்தாலும் சரி திராவிட முன்னேற்ற கழகத்தை எந்த கொம்பனாலும் தொட்டுகூட பார்க்க முடியாது என்றும் முடிவில்வெல்வோம்200 படைப்போம் வரலாறு என்று அதிரடியாக பேசி முடித்தார். கூட்டத்தில் மாவட்ட பகுதி வட்ட நிர்வாகிகள் பாக முகவர்கள் உட்பட 500க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர் அவர்கள் அனைவருக்கும் அசைவ உணவு வழங்கப்பட்டது.

# நீடாமங்கலத்தில் பனை விதைகள் நட்டு பனை உயிர் வேலி அமைத்த மாணவர்கள்

**சென்னை ,அக்.16**

தஞ்சை- நாகை தேசிய நெடுஞ்சாலையில் நீடாமங்கலம் அருகே நகர் ஊராட்சியில் அரசு தொழில் பயிற்சி நிலையம் உள்ளது. இங்கு நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர்.

தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அறிவுறுத்தலின்படி மாநில நாட்டுநலப்பணித்திட்டக்குழுமம், கிரீன் நீடா சுற்றுச்சூழல் அமைப்பு, திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்டக்குழுமம், திருவாரூர் மாவட்ட வனத்துறை இணைந்து ஒருங்கிணைக்கும் ஒரு கோடி பனை விதைகள் நடும் நெடும் பணியில் நீடாமங்கலத்தில் பனை விதைகள் நட்டு பனை உயிர் வேலி அமைத்த அரசு தொழிற்கல்வி மாணவர்களின் செயல் பொதுமக்களின் பாராட்டைப் பெற்று வருகிறது.அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தை சுற்றிலும் திறந்த வெளியாக இருந்தது. சுற்றுச்சுவர் கட்டப்படாத நிலையில் பனை விதைகளை நெருக்கமாக விதைத்து பனை உயிர் வேலி அமைத்துள்ளனர். திருவாரூர் மாவட்ட வனப்பாது காவலர் அபிராமி பேசுகையில், பனை விதைகள் மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் விதைத்து மண்ணரிப்பை தடுக்க வேண்டும். வனத்துறை மூலம் இலவசமாக வழங்கப்படும் மரக்கன்றுகளை பெற்று தங்கள் பகுதியை பசுமையாக வைத்துக் கொள்ள வேண்டும். இதனால் சுறாறுச்சூழல் மேம்படும் என்றார்.நிகழ்ச்சியில் கிரீன் நீடா சுற்றுச்சூழல் அமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் கிரீன் நீடா மு.ராஜவேலு, திருவாரூர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.ஆர்.கே.ஜானகிராமன், பயிற்சி அலுவலர் எஸ்.சண்முகநாதன், பயிற்றுனர்கள் எம்.குமரேசன், பொ.விஜயராஜா, தா.செந்தில்குமார், எஸ்.தனராஜ், வி.செல்வமணி ஆகியோர் கலந்து கொண்டனர். ஐடிஐ வளாகத்தில் நட்ட பனை விதைகளின் எண்ணிக்கையை தமிழ்நாடு பசுமை இயக்கம் செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

முன்னதாக அரசு தொழிற் பயிற்சி நிலைய முதல்வர் மா.பாலசுப்ரமணியன் வரவேற்றார். நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் ஜெ.இளையராஜா நன்றி கூறினார்.

# தீபாவளி பண்டிகையையொட்டி போக்குவரத்து மாற்றம்

**சென்னை அக் 16-**

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அக்.17, 18 தேதிகளில்ஜி.எஸ்.டி. சாலையில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.சென்னை, ஆவடியில் இருந்து வரும் கனரக வாகனங்கள் பூந்தமல்லி, ஸ்ரீபெரும்புதூர், தி.மலை வழியாக இயக்கப்படுகிறதும மதுரவாயலில் இருந்து ஜி.எஸ்.டி. சாலையை நோக்கி வரும் கனரக வாகனங்கள் ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் வழியாக இயக்கப்படுகிறது.அக்.21, 22 தேதிகளில் ஜி.எஸ்.டி. சாலை வழியாக சென்னை திரும்பும் கனரக வாகனங்களுக்கும் போக்குவரத்து மாற்றம்செய்யப்பட்டுள்ளது.செங்கல்பட்டு வழியாக சென்னை வரும் வாகனங்கள் ஸ்ரீபெரும்புதூர்பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை வழியாக வரலாம் சிங்கப்பெருமாள் கோவில் வழியாக வரும் கனரக வாகனங்கள் ஒரகடம், ஸ்ரீபெரும்புதூர் வழியாக வரலாம் கிளாம்பாக்கம் செல்லும் வாகனங்கள் விரைந்து செல்லவும், நெரிசலை குறைக்கவும் தாம்பரம் காவல்துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

# ராணுவ குடியிருப்பில் உள்ள வீட்டில் மின் ஒயர்கள் மற்றும் குடிநீர் குழாய்கள் திருடியவர் கைது

**சென்னை அக் 16-**

தெலுங்கானாவைச் சேர்ந்த தேவர்புலா நரேஷ், என்பவர், இராணுவத்தில் அவில் தாரா பணியாற்றி வருவதாகவும், சென்னை, தேனாம்பேட்டையிலுள்ள இராணுவ குடியிருப்பில் மேற்பார்வையாளராக பணி செய்து வருவதாகவும், கடந்த 11.ந் தேதி அன்று சுமார் இக்குடியிருப்பிலுள்ள ஒரு வீட்டின் சுமார் ரூ.5,ஆயிரம் மதிப்புள்ள மின்சார ஒயர்கள் மற்றும் குடிநீர் குழாய்கள் உடைத்து திருடப்பட்டிருப்பதாகவும், மேற்படி திருட்டில் ஈடுபட்ட நபர்களை கண்டறிந்து நடவடிக்கை எடுக்குமாறும், தேவர்புலா நரேஷ் என்பவர் தேனாம்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

தேனாம்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி திருட்டில் ஈடுபட்ட எதிரி ஜெகன், என்பவரை கைது செய்தனர்.

விசாரணையில் எதிரி ஜெகன் அவருடைய நண்பருடன் சேர்ந்து மேற்படி குடியிருப்பில் பொருட்களை திருடி விற்று பணத்தை இருவரும் பிரித்துக் கொண்டது தெரியவந்தது. அதன்பேரில், எதிரி ஜெகனிடமிருந்து செலவு செய்த பணம் போக ரூ.500 பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும் விசாரணையில் எதிரி ஜெகன் மீது ஏற்கனவே மயிலாப்பூர் காவல் நிலையத்தில் 2 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி ஜெகன் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய தலைமறைவு எதிரியை காவல் குழுவினர் தேடி வருகின்றனர்.

# வியாசர்பாடி பகுதியில் ஆட்டோ ஓட்டுநர் மீது தாக்குதல்: இருவர் கைது

**சென்னை அக் 16-**

சென்னை, வியாசர்பாடி, ஏ கல்யாணபுரம் 1வது தெருவில் வசித்து வரும்என்.மணிகண்டன், என்பவர் ஆட்டோ ஓட்டி வருகிறார். என்.மணிகண்டன் ஆட்டோவில் செல்லும்போது, அதே தெருவைச் சேர்ந்த வி.மணிகண்டன் என்பவர் முறைத்தபடி செல்வதாகவும், கடந்த 10.ந் தேதி அன்று காலை, என்.மணிகண்டன் ஆட்டோவில் சவாரி அழைத்ததின்பேரில், வீட்டிலிருந்து ஆட்டோவில் சென்றபோது, வீட்டினருகே ஏ. கல்யாணபுரம் 1வது தெருவில் நின்றிருந்த வி.மணிகண்டன் மற்றும் அவரது நண்பர் மணிகண்டனின் ஆட்டோவை வழிமறித்து, வீண் தகராறு செய்து, கையால் தாக்கினர். மேலும்வி.மணிகண்டன் கீழே இருந்த காலி பீர் பாட்டிலை எடுத்து மணிகண்டனின் தலையில் தாக்கிவிட்டு கொலை மிரட்டல் விடுத்து இருவரும் தப்பிச் சென்றனர். தாக்கதலில் காயமடைந்த மணிகண்டன் மேற்படி சம்பவம் குறித்து வியாசர்பாடி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். வியாசர்பாடி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, இவ்வழக்கில் தொடர்புடைய எதிரிகள் வி.மணிகண்டன், மற்றும் அரிஷ் (எ) அரியா, ஆகிய இருவரை கைது செய்தனர்.

விசாரணையில் எதிரி வி.மணிகண்டன் மீது ஏற்கனவே 2 கொலைமுயற்சி, வழிப்பறி உட்பட 4 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**

# சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு பணிகள்: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் ஆய்வு



**சென்னை,அக்.16**

துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் (15.10.2025) பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில், பொதுமக்களிடமிருந்து சமூக வலைதளங்கள் மற்றும் தொலைபேசி எண்ணிற்கு வரப்பெற்ற புகார்கள் மற்றும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்களை கணினிகளில் பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன், 1913 என்ற உதவி எண்ணிற்கு பொதுமக்களிடமிருந்து வரும் புகார்களை நேரடியாக கேட்டறிந்தார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலக கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் அமைக்கப்பட்டுள்ள மிகப்பெரிய எல்.ஈ.டி திரைகள் மூலமாக நகரின் பல்வேறு இடங்களில் உள்ள 22 சுரங்கப்பாதைகளில் போக்குவரத்து சீராக நடைபெறுவதையும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இன்று காலை 9.00 மணி வரை கடந்த 24 மணி நேரத்தில் சராசரியாக 38.19 மி.மீட்டர் மழை பெய்துள்ளதையும், அதிகபட்சமாக எண்ணூரில் 136.50 மி.மீட்டர் பெய்துள்ளதையும், குறைந்த பட்சமாக அம்பத்தூரில் 0.30 மி.மீட்டர் மழை பெய்துள்ள விவரங்களையும் துணை முதலமைச்சர் மின்னணு திரையில் பார்வையிட்டார். மேலும், மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு கால்வாய்களில் மழை நீர் தடையின்றி செல்வதையும், நேப்பியர் பாலம் அருகில் உள்ள முகத்துவாரத்தில் நீர் தடையின்றி கடலுக்கு செல்வதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்வில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாட்டு பணிகளின் விவரங்கள் குறித்து அமைச்சர், மாநகராட்சி மேயர், மாநகராட்சி ஆணையர் ஆகியோரிடம் கேட்டறிந்தார்.

அதற்கு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர், மேயர் மற்றும் ஆணையர் ஆகியோர் பதில் தெரிவிக்கையில், வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் வகையில் சென்னை பெருநகர மாநகராட்சி பகுதிகளில் மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீரை வெளியேற்றும் வகையில் 100 ஹெச்.பி திறன் கொண்ட 150 மோட்டார் பம்புகள், டிராக்டர் மேல் பொருத்தப்பட்ட 500 மோட்டார் பம்புகள் உள்பட பல்வேறு திறன் கொண்ட 1,436 மோட்டார் பம்புகள் தயார் நிலையில் உள்ளன. பல்வேறு கால்வாய்களில் பணிகள் மேற்கொள்வதற்காக 2 ஆம்பிபியன்கள், 3 ஆம்பிபியன் எஸ்கவேட்டர்கள், 6 ரோபோடிக் எஸ்கவேட்டர்கள், 3 மினி ஆம்பிபியன்கள், 7 சூப்பர் சக்கர் வாகனங்கள், 15 மரக்கிளை அகற்றும் சக்திமான் வாகனங்கள், உட்பட மொத்தம் 478 வாகனங்கள் மற்றும் இயந்திரங்களும், 489 மர அறுவை இயந்திரங்களும் தயார் நிலையில் உள்ளன.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கடந்த நான்காண்டுகளில் 1,217 கிலோமீட்டர் நீளத்திற்கு மழை நீர் வடிகால்கள் கட்டப்பட்டுள்ளன, இதுவரை 1,136 கிலோமீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாய்களும், 1 லட்சத்து 6 ஆயிரம் வண்டல் வடிகட்டி தொட்டிகளும் தூர்வாரப்பட்டுள்ளன. சென்னை மாநகராட்சி சார்பில் 193 இடங்களில் நிவாரண மையங்களும், நிவாரண மையங்களுக்கு உணவு வழங்க 150 மைய சமையல் கூடங்களும் தயார் நிலையில் உள்ளன. மழைக்காலத்தினை முன்னிட்டு, மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களை மீட்டு நிவாரண மையங்களில் தங்க வைப்பதற்காக மாநகராட்சிக்கு சொந்தமான 36 படகுகள் உள்பட 103 படகுகள் தயார் நிலையில் உள்ளன.

பருவமழை கால பணிகளில் மாநகராட்சியைச் சேர்ந்த அலுவலர்கள், பொறியாளர்கள், பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட 22 ஆயிரம் பேர் ஈடுபட்டுள்ளனர். சென்னை குடிநீர் வாரியம் சார்பில் 15 மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் 2,149 களப்பணியாளர்கள் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் 299 தூர்வாரும் இயந்திரங்கள். 73 அதிவேக கழிவுநீர் உறிஞ்சும் வாகனங்கள். 298 ஜெட்ராடிங் வாகனங்கள், பிற மாவட்டங்களில் இருந்து வரவழைக்கப்பட்டுள்ள 45 கழிவுநீர் ஊர்திகள் என மொத்தம் 642 கழிவுநீர் அகற்றும் இயந்திரங்கள் கழிவுநீர் அகற்றும் பணிக்காக தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்று துணை முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தனர். இந்த ஆய்வின்போது, பொதுமக்கள் அளிக்கும் புகார்களுக்கு உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்வதுடன், புகாரின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து, சம்மந்தப்பட்ட நபருக்கு தெரிவிக்குமாறும், அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஒருங்கிணைந்து அர்ப்பணிப்பு உணர்வுடன் வடகிழக்கு பருவமழை பணிகளை மேற்கொள்ளுமாறும் துணை முதலமைச்சர் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, அமைச்சர் கே.என்.நேரு, சென்னை மாநகராட்சி மேயர்ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்திகலந்து கொண்டனர்.

# அசோக் நகர் பகுதியில் மெத்தம்பெட்டமைன் வைத்திருந்த வழக்கில் மேலும் ஒருவர் கைது

**சென்னை அக் 16-**

சென்னையில் போதை பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு காவல்குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர் மற்றும் அசோக் நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர்கள் ஒருங்கிணைந்து, கடந்த ஏற்கனவே 13 பேரை கைது செய்தனர். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். கைது செய்யப்பட்ட எதிரிகளின் தகவலின்பேரில், காவல் குழுவினர் மற்றும் அசோக் நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து மேற்படி வழக்கில் தொடர்புடைய தலைமறைவாக இருந்த எதிரி ஜனா (எ) ஜனார்த்தனன், என்பரை தஞ்சாவூரில் கைது செய்தனர். அவரிடமிருந்து 1 ஐபோன் பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்டஎதிரி ஜனார்த்தனன் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.



**சென்னை பெருநகர காவல் ஆணையரகத்தில்நடைபெற்ற பொதுமக்கள்குறைதீர்முகாமில்பொதுமக்களிடம்ஆணையர் அருண் புகார் மனுக்களை பெற்று விரைந்து நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.**

# அரும்பாக்கம் பகுதியில் போதைப்பொருள் வைத்திருந்த இருவர் கைது

**. சென்னை அக் 16-**

அரும்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் நேற்று (14.10.2025) மாலை, அரும்பாக்கம், அசோகா நகர் மற்றும் 100 அடி சாலை சந்திப்பு அருகே கண்காணித்து, அங்கு சந்தேகப்படும்படி நின்றிருந்த 2 நபர்களை விசாரித்து, சோதனை செய்தபோது, கஞ்சா ஆகிய போதைப்பொருட்கள் மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது. அதன்பேரில், சென்னை அரும்பாக்கம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து, போதைப்பொருட்கள் வைத்திருந்த 1.பிரின்ஸ், வ/38, (சொந்த ஊர் இடுக்கி, கேரளா), மேனாம்பேடு, அம்பத்தூர், சென்னை, 2.சமீர், வ/43, மலப்புரம், கேரளா ஆகிய 2 நபர்களை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 1,066 கிராம் 180 கிராம் OG கஞ்சா, 2 செல்போன்கள் மற்றும் 1 சிறிய எடை இயந்திரம் பறிமுதல் செய்யப்பட்டது.விசாரணையில் எதிரிகள் இருவரும் அம்பத்தூரில் உள்ள மேற்படி விலாசத்தில் உள்ள வீட்டை வாடகைக்கு எடுத்து, ஒடிசாவில் இருந்து எ மற்றும் ஒஜி கஞ்சா வாங்கி வந்து, சென்னையில் விற்பனை செய்து வந்ததும், எதிரி பிரின்ஸ் மீது ஆந்திரா, கேரளா மாநிலங்களில் போதைப்பொருள் வழக்குகளும், மற்றொரு எதிரி சமீர் ஆந்திராவில் போதைப் பொருள் வழக்கில் கைதாகி 2021ம் ஆண்டு முதல் சிறையிலிருந்து சமீபத்தில் சிறையில் இருந்து வெளியே வந்ததும் தெரியவந்தது.கைது செய்யப்பட்ட 2 எதிரிகளும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

**தலைகவசம் உயிர் கவசம்**

# ஐஜிஓ டெக் பார்மிங் எக்ஸ்பர்ட் சயன்டிஸ்ட் பவுண்டேஷன் அறிமுகம்: அறிவியல் மற்றும் நிலைத்துவ வேளாண்மையை முன்னேற்றும் புதிய முயற்சி



**சென்னை,அக்.16**

தொழில்நுட்ப விவசாய விஞ்ஞானி டாக்டர் ஜான் யேசுதாஸ், Ceo, igo group (இந்தியாவின் முன்னணி விவசாயக் கூட்டு நிறுவனம்) அவர்களின் தொலைநோக்கு தலைமையில் செயல்படும் ஐஜிஓ அக்கிரிடெக் பார்ம்ஸ், இந்தியாவில் சாமார்த்தியமான மற்றும் நிலைத்துவமான வேளாண்மையின் எதிர்காலத்தை உருவாக்கும் நோக்கில் "ஐஜிஓ டெக் பார்மிங் எக்ஸ்பர்ட் சயன்டிஸ்ட் பவுண்டேஷன்" எனும் முக்கியமான புதிய முயற்சியை அறிமுகப்படுத்தி ஒரு முக்கிய மைல்கல்லை எட்டியுள்ளது.இந்த அறிமுக விழாவில் தலைமை விருந்தினராக இஸ்ரோ, பெங்களூருவின் விஞ்ஞானி டாக்டர் பி. என். பொன்னுசாமி அவர்கள் கலந்து கொண்டது பெருமையாகும். 1985 ஆம் ஆண்டில் இஸ்ரோவில் தனது சிறப்பான பணியை தொடங்கிய அவர், 2020 ஆம் ஆண்டு வரை 35 ஆண்டுகளுக்கும் மேலாக சேவை ஆற்றினார். இந்தியாவின் விண்வெளி ஆய்வுத் துறையில் அவரின் அபார பங்களிப்பு இன்றும் இளைஞர் கண்டுபிடிப்பாளர்களுக்கும் தொழில் முனைவோருக்கும் ஊக்கமளிக்கிறது.

இவ்விழாவில் பேசிய தொழில்நுட்ப விவசாய விஞ்ஞானி டாக்டர் ஜான் யேசுதாஸ், தலைமை நிர்வாக அதிகாரி, ஐஜிஓ அக்கிரிடெக் பார்ம்ஸ், கூறுகையில்: ஐஜிஓவில், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் பாரம்பரியம் இணைந்து வேளாண்மையில் புரட்சியை ஏற்படுத்தும் எதிர்காலத்தை நாங்கள் கனவு காண்கிறோம். 'டெக் பார்மிங் எக்ஸ்பர்ட் சயன்டிஸ்ட் பவுண்டேஷன்' என்பது ஆராய்ச்சி, புதுமை மற்றும் நிலைத்த வளர்ச்சியை ஊக்குவிக்கும் எங்களின் உறுதிமொழியாகும். எதிர்கால தலைமுறைகளுக்கும் வேளாண்மை வளமும் முன்னேற்றமும் தரும் துறையாக தொடரும் என நம்புகிறோம்.ஐஜிஓ டெக் பார்மிங் எக்ஸ்பர்ட் சயன்டிஸ்ட் பவுண்டேஷன் அறிமுகம், புதுமை, ஒத்துழைப்பு மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்பு ஆகியவற்றின் மூலம் இந்திய வேளாண்மையில் மாற்றத்தை உருவாக்கும் ஐஜிஓ அக்கிரிடெக் பார்ம்ஸ் நிறுவனத்தின் நோக்கத்தை மேலும் வலுப்படுத்துகிறது.



**மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில் தமிழ்நாடு அரசின் சார்பில் வீட்டுமனைபட்டா வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்ற துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலினுக்கு காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ.தலைமையில் திமுகவினர் நினைவு பரிசு வழங்கினர்.உடன் மண்டல குழு தலைவர் நொள்ம்பூர் வே.ராஜன், மாமன்ற உறுப்பினர்கள் ராமாபுரம்வ.செல்வகுமார்,கே.ராஜூ,ஹேமலதாகணபதி, ச.சங்கர்கணேஷ், செல்விரமேஷ், எஸ்.பாரதி, ரமணிமாதவன், சாந்திராமலிங்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.**

# மதுரவாயல், வானகரம், வேலப்பன்சாவடி உள்ளிட்ட இடங்களில் போக்குவரத்து நெரிசல்

**சென்னை அக் 16-**

சென்னை மதுரவாயல், வானகரம், வேலப்பன்சாவடி உள்ளிட்ட இடங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. காலை முதல் பரவலாக மழை பெய்துவரும் நிலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதால் வாகன ஓட்டிகள் அவதியடைந்துள்ளனர். இருசக்கர வாகனத்தில் அலுவலகம் செல்வோர் மழையில் நனைந்தபடி போக்குவரத்து நெரிசலில் சிக்கி அவதியடைந்தனர்.

# பர்கூர் தொகுதியில் அதிமுக சார்பில் வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்



கிருஷ்ணகிரி,அக்.16-

பர்கூர் தொகுதியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் சார்பில் வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சரும் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி அவர்களின் ஆணைக்கிணங்க, கழகத் துணை பொது செயலாளரும் முன்னாள் அமைச்சரும் வேப்பனப்பள்ளி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.முனுசாமி, நாடாளுமன்ற ராஜ்யசபா உறுப்பினரும் கழக கொள்கை பரப்பு செயலாளர் மு.தம்பிதுரை ஆகியோர் ஆலோசனையில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பர்கூர் தெற்கு ஒன்றியம் தொகரப்பள்ளி

பில்லகொட்டாய், ஜெகதேவி, அஞ்சூர், குலாமலை உள்ளிட்ட ஊராட்சி வாக்குச் சாவடி முகவர்களுக்கான ஆலோசனை கூட்டம் நடந்தது . இக்கூட்டத்தில் பர்கூர் தொகுதி பொறுப்பாளர் தமிழ்வாணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் ஒன்றிய கழக செயலாளருமான சி.வி. ராஜேந்திரன், முன்னாள் ஒன்றிய குழு தலைவரும் ஒன்றிய கழக செயலாளருமான ஜெயபால் ஆகியோர் கலந்து கொண்டு வாக்குச்சாவடி முகவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கினார்கள்.

வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் பர்கூர் சட்டமன்ற தொகுதி அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும். அதற்கு நீங்கள் சிறப்பாக பணியாற்றிட வேண்டுமென அதிகப்படியான இளைஞர்களை சந்தித்து முகவர்களை சேர்க்க வேண்டும் உள்ளிட்ட ஏராளமான ஆலோசனைகளை வழங்கினார்கள். நிகழ்ச்சியில் அம்மா பேரவை மாவட்ட செயலாளர் எஸ்.எம்.மாதையன், இளைஞர் இளம் பெண்கள் பாசறை மாவட்ட துணை செயலாளர் பிரபு, இலக்கிய அணி மாவட்ட செயலாளர் கார்த்திகேயன், ஒன்றிய இளைஞரணி செயலாளர் கண்ணையன் என்கிற நரசிம்மன், ஒன்றிய அவைத் தலைவர் மாதப்பன், கிளைச் செயலாளர்கள் மணிவண்ணன் , முனிரத்தினம், முத்துமாணிக்கம், சாமுண்டி, மணி, முருகேசன், பார்த்திபன், ரத்தினம், அரியப்பன், மின்னல் சௌகத், ஆட்டோ சங்கர், சேகரன், ஜெகன், ராகுல், கிருஷ்ணமூர்த்தி, சேட்டு, அண்ணாமலை, கோபால், ரவி , டைலர் சரவணன், கோவிந்தராஜ், நடராஜ் , சக்திவேல், அரசு ,சாமுடி, மகளிர்அணி சுதா, சோபனா, சர்மிளா, ராஜேஸ்வரி, கனகா, சரிதா, மலர், பிரியா, கலா, வேண்டாமணி, உள்ளிட்ட ஏராளமான அதிமுக கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம் வரும் 18ல் நடக்கிறது

## கலெக்டர் ச.தினேஷ் குமார் தகவல்

கிருஷ்ணகிரி,அக்.16-

தமிழக முதலமைச்சரின் "நலம் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாம் கிருஷ்ணகிரி மாவட்டம், சிங்காரப்பேட்டை, அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 18.10.2025 அன்று காலை 09.00 மணி முதல் மாலை 05.00 வரை சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற உள்ளது.

இம்மருத்துவ முகாமில் பொதுமக்களுக்கு தேவையான இரத்த பரிசோதனை, கர்ப்பிணித்தாய்மார்களுக்கு ஸ்கேன் பரிசோதனை, ஒ-சுயலஇ நுஊபுஇ நுஊர்ழுஇ ருடவசய ளுழரனெஇ கண் பரிசோதனை மற்றும் மகப்பேறு மருத்துவம் போன்ற 17 வகையான சிறப்பு நிபுணர்களைக் கொண்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

மேலும், இம்முகாமிற்கு வரும் பொதுமக்களுக்கு முதலமைச்சர் காப்பீட்டு திட்ட அட்டை வழங்கப்படுகிறது. மாற்றுத் திறனாளிகளுக்கும் மற்றும் தொழிலாளர்களுக்கும் இலவசமாக அடையாள அட்டை வழங்கப்படுகிறது. அனைத்து பொதுமக்களுக்கும் இலவசமாக உடல் பரிசோதனை மற்றும் இருதய பரிசோதனை செய்யப்படுகிறது.

இம்முகாமில் தொற்றா நோய், உயர் இரத்த அழுத்தம், கண் பார்வை பரிசோதனை, சிறுநீரக பரிசோதனை, இதய பரிசோதனை மற்றும் நரம்பியல் மருத்துவம், சித்த மருத்துவம், பெண்களுக்கான மார்பக புற்றுநோய் பரிசோதனை மேலும் பல் சிகிச்சை உட்பட 17 வகையான சிறப்பு மருத்துவர்கள் மூலம் சிகிச்சை மேற்கொள்ளப்பட உள்ளதால் அனைத்து பொது மக்களும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கலெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்துள்ளார்.



நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், திடுமல் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# தருமபுரி மாவட்டத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள்

## கலெக்டர் ரெ.சதீஸ் ஆய்வு



தருமபுரி,அக்.16-

தருமபுரி மாவட்டம், மொரப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை கலெக்டர் ரெ.சதீஸ், (15.10.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

தருமபுரி மாவட்டம், மொரப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கெலவள்ளி ஊராட்சியில் வறட்சி நிதி-2024-2025 திட்டத்தின் கீழ் ரூ.3.90 இலட்சம் மதிப்பீட்டில் புதிய ஆழ்துளைக்கிணறு மற்றும் மின்மோட்டார் பைப்லைன் அமைக்கப்பட்டுள்ளதையும், கெலவள்ளி ஊராட்சியில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் கால்வாய் தூர்வாரும் பணியினையும், கே.ஈச்சம்பாடி ஊராட்சியில் உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.5.83 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரண்டு புதிய வகுப்பறை கட்டிடங்கள் என மொத்தம் ரூ.18.23 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்ற பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை கலெக்டர் ரெ.சதீஸ், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். மேலும், தருமபுரி மாவட்டம், மொரப்பூர் ஊராட்சி ஒன்றியம் கே.ஈச்சம்பாடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் கலெக்டர் ரெ.சதீஸ், திடீர் ஆய்வு மேற்கொண்டு, அப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளின் பாடங்கள் தொடர்பாக விளக்கங்கள் கேட்டு, மாணவ, மாணவிகளின் கற்றல் அடைவு மற்றும் வாசிப்புத் திறன் குறித்துக் கேட்டறிந்தார்கள். இந்த ஆய்வின் போது, மொரப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர் சத்யா, உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

# நாமக்கல் மாவட்டம் முழுவதும் நீர்நிலைகளில் 6 கோடி பனை விதைகள் நடும் பணி

## கலெக்டர் துர்காமூர்த்தி தொடங்கி வைத்தார்



நாமக்கல்,அக்.16-

நாமக்கல் மாநகராட்சிக்குட்பட்ட வீசானம் ஏரியில் (15.10.2025) கலெக்டர் துர்கா மூர்த்தி, மாநிலம் முழுவதும் நீர்நிலைகளில் ஆறு கோடி பனை விதைகள் நடும் நெடும் பணி திட்டத்தின் கீழ் பனை விதைகளை நட்டு வைத்தார்.

தமிழ்நாடு முழுவதும் 2025 ஆம் ஆண்டிற்கான பனை விதை நடவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு அரசு, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை மூலம், மாவட்ட நிருவாகங்கள் மற்றும் தமிழ்நாடு தன்னார்வலர்களுடன் இணைந்து, 2024 பனை விதை நடும் இயக்கம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் 6 கோடி பனை விதைகளை இலக்காக கொண்டு தற்போது மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில், நாமக்கல் மாவட்டத்தில், நீர்நிலைகள், தரிசு நிலங்கள் மற்றும் பனை காடுகளை உருவாக்குவதற்கு அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் 4.11 இலட்சம் பனை விதைகளை நடவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

அதனைத் தொடர்ந்து இன்றைய தினம் கலெக்டர் துர்கா மூர்த்தி, நாமக்கல் மாநகராட்சிக்குட்பட்ட வீசானம் ஏரியில் பனை விதைகளை நட்டு வைத்தார். இதில் பி.ஜி.பி வேளாண்மை அறிவியல் கல்லூரி, விவேகானந்தா மகளிர் கல்லூரி மற்றும் தன்னார்வலர்கள் கலந்து கொண்டு சுமார் 5,000 பனை விதைகளை நடவு செய்தனர்.

தொடர்ந்து, கலெக்டர் துர்கா மூர்த்தி, நாமக்கல் மாநகராட்சிக்குட்பட்ட உழவர் சந்தை அருகில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகம் கட்டிடம் கட்டுமான பணிகள் நடைபெற்று வருவதையும், கொசவம்பட்டியில் ரூ.23.00 கோடி மதிப்பீட்டில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டப்பட்டு வருவதையும், பொன்நகர் பகுதியில் ரூ.1.72 கோடி மதிப்பீட்டில் புதை வடிகால் கட்டுமான பணிகள் நடைபெற்று வருவதையும் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைவாகவும், தரமாகவும் முடித்து பயன்பாட்டிற்கு வழங்கிட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, மோகனூர் சாலையில் உள்ள இளங்கலை கல்லூரி மாணவியர் சமூக நீதி விடுதியில் ஆய்வு மேற்கொண்டு, மாணவியர்களுக்கு வழங்க தயாராக இருந்த உணவினை பார்வையிட்டார். மேலும், விடுதியில் தங்கியுள்ள மாணவியர்களின் எண்ணிக்கை, மின்சாரம், குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள், உணவு பொருட்கள் இருப்பு ஆகியவை குறித்து பணியாளர்களிடம் கேட்டறிந்து, விடுதியினை தூய்மையாக பராமரிக்க வேண்டும் என அறிவுறுத்தினார். இந்நிகழ்வில், நாமக்கல் மாநகராட்சி ஆணையர் க.சிவக்குமார், மாநகராட்சி சுகாதார அலுவலர் திருமூர்த்தி, ரெட்கிராஸ் செயலர் திரு சி.ஆர்.இராஜேஸ் கண்ணன் உட்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நாமக்கல் கம்பன் கழகம் சார்பில் கம்பர் விருது வழங்கும் விழா



ராசிபுரம்,அக்.16-

நாமக்கல்லில் கம்பன் கழகம் 50-ஆம் ஆண்டு பொன் விழாவையொட்டி விருதுகள் வழங்கும் விழா நாமக்கல் - சேலம் சாலையில் உள்ள ஹோட்டலில் நடைபெற்றது. இதில், கம்பர் விருது, கம்பர் மாமணி விருது, துறை சார் வல்லுநர் விருது, மாணவர்களுக்கு பரிசளிப்பு உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன. விழாவில், கம்பன் கழக தலைவர் வ.சத்தியமூர்த்தி தலைமை வகித்தார். செயலாளர் அரசு பரமேசுவரன் வரவேற்றார். தமிழ் சங்க தலைவர் மருத்துவர் இரா.குழந்தைவேல், கம்பன் கழக பொருளாளர் பசுமை மா.தில்லை சிவக்குமார், கே.கே.பி.நல்லதம்பி, நல்லுசாமி, இராம.சீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் சென்னை விஜிபி குழுமத்தலைவர் வி.ஜி.சந்தோசம் அவர்களுக்கு 'இயற்றமிழ் பேரறிஞர்' விருதும், ராசிபுரம் சிந்தாமணிச் செல்வர் புலவர் மு.ராமசாமிக்கு நூற்றாண்டு விழா விருதும் (அவரது மகன் மணிவண்ணன் பெற்றுக் கொண்டார்). 'இலக்கியச் சுடர்' சென்னை இரா.ராமமூர்த்திக்கு கம்பர் விருதும், திருச்செங்கோடு கம்பன் கழக துணைத் தலைவரும், செங்குந்தர் கல்வி நிறுவனங்களின் செயலாளருமான பேராசிரியர் ஆ.பாலதண்டபாணிக்கு கம்பன் மாமணி விருதும் வழங்கப்பட்டது.

'கம்பன் என்றொரு மானுடன்' என்ற தலைப்பில் தமிழ் வளர்ச்சிக் கழக இயக்குநரும், பாரதியார் சங்க தலைவரும், பேராசிரியையுமான உலகநாயகி பழனி விழாவில் உரையாற்றியதாவது, சென்னையில் 'உறவுச் சுரங்கம்' என்ற அமைப்பை உருவாக்கி வாரந்தோறும் இலக்கிய சொற்பொழிவுகளை நடத்தி வருகிறேன். எனது தமிழ் பணியை பாராட்டி வாழ்த்திய சிலம்பொலியார் பிறந்த மண்ணில் கம்பன் பற்றி பேசுவதில் பெருமையாக உள்ளது. தற்போதைய காலச்சூழலில் சுருங்கிய 400 ஆண்டு கால வயதுடைய ஆங்கிலம் அழிந்துபோகும். 4,000 ஆண்டு கால தமிழ் அழிந்து போகாது. 'கம்பன் என்றொரு மானுடன்' என்ற தலைப்பை வழங்கிய பெருமை பாரதியையே சாரும். கல்வியில் சிறந்த தமிழ்நாடு போல, கம்பன் பிறந்த தமிழ்நாடு என பாரதியார் கம்பனை பெருமைப்படுத்தி உள்ளார். ஐந்து வகை மனிதர்கள் உண்டு என்று கூறிய அவர் பித்த மனிதர், விந்தை மனிதர், இறந்த மனிதர், வேடிக்கை மனிதர், கலக பூச்சி மனிதர் என்றார். இதில், ஒவ்வோர் மனிதருக்கும் ஒரு குணம் உண்டு. ஒரே இனத்தைச் சேர்ந்த விலங்குகள் ஒன்றையொன்று அடித்துக் கொல்லாது. ஆனால் மனிதன் தான் உயர மற்றொரு மனிதரை அடித்துக் கொல்வான். நல்ல மனிதன் என்பவனை, கம்பராமாயணத்தில் கண்டறிந்தான். அதாவது, சுயநலமின்றி, பிறர் நலம் பேணுபவனே வாழத் தகுதியுடைய மனிதன் எவனோ அவனே நல் மனிதன். கம்பராமாயணம் எழுதிய கம்பனுக்கு புகழ் சேர்த்த பெருமை பாரதிக்கு உண்டு என்றார்.

முன்னதாக, 'துறைசார் வல்லுநர்' விருது வழங்கும் நிகழ்வில், கம்பன் கழக பொருளாளர் பசுமை மா. தில்லை சிவக்குமார் விருதாளர்களை அறிமுகம் செய்து வைத்தார். இதனைத் தொடர்ந்து, பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவன தலைவர் க.சண்முகம், எருமப்பட்டி அரசுப் பள்ளி முதுநிலை தமிழாசிரியர் நல்லாசிரியர் விருது பெற்ற செ.செந்தில்குமார், மோகனூர் மருத்துவர் எஸ்.மணிவண்ணன், சிங்களாந்தபுரம் பி.மகுடீஸ்வரன், சு.புஷ்பா ஆகியோருக்கும் விருது வழங்கப்பட்டது. கம்பன் விழா பேச்சுப்போட்டியில், தருமபுரி வருவான்வடிவேலன் கல்லூரி மாணவர் தங்கமுத்துக்கு முதல் பரிசு, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர் கௌதம் 2ம் பரிசு, மதுரைக் கல்லூரி மாணவர் ஹரிஹரன் 3ம் பரிசை வென்றனர்.

இவ்விழாவில் முதல் நாள் கம்பன் கழக துணைச் செயலாளர் ஜெ.பாரதி நன்றி கூறினார். இரண்டாம் நாளில் பட்டிமன்றத்தில் தொடக்கவுரையை தலைவர், நாமக்கல் தமிழ்ச் சங்கம் டாக்டர் ஆர்.குழந்தைவேல், அதனை தொடர்ந்து கவிச் சக்கரவர்த்தி கம்பன் காப்பியத்தில் பெரிதும் மிளிர்வது அறமா? வீரமா என்ற தலைப்பில் பேராசிரியர் கு. ஞானசம்பந்தம் நடுவராக பங்கேற்றார். அறமே என்ற தலைப்பில் பேராசிரியர் விஜயசுந்தரியும், ராம்குமாரும், வீரமே என்ற தலைப்பில் பேராசிரியர் சிதம்பரம் மற்றும் இந்திரா விஜயலட்சுமியும் பேசினார்கள். நன்றியுரையை இயக்குநர், கிரீன்பார்க் பள்ளி முனைவர் எஸ்.குருவாயூரப்பன் ஆற்றினார்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road, Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# சேலம் மாவட்டம், வாழப்பாடி பேரூராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள்

## கலெக்டர் இரா.பிருந்தாதேவி நேரில் ஆய்வு



சேலம்,அக்.16-

சேலம் மாவட்டம், வாழப்பாடி பேரூராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை கலெக்டர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, (15.10.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்விற்குப்பின், கலெக்டர் தெரிவித்ததாவது:

பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளுக்கு முக்கியத்துவம் அளித்து தமிழ்நாடு அரசு பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை செயல்படுத்தி வருகிறது. இத்தகைய திட்டங்கள் தரமாகவும், உரிய கால அளவில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதை உறுதி செய்திடும் வகையில் தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பேரூராட்சிகள் துறையின் மூலம் கடந்த 4 1/2 ஆண்டுகளில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.2.58 கோடி மதிப்பீட்டிலும், நபார்டு திட்டத்தின்கீழ் ரூ.2.83 கோடி மதிப்பீட்டிலும், அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ் ரூ.1.93 கோடி மதிப்பீட்டிலும், நகர்ப்புர சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.1.97 கோடி மதிப்பீட்டிலும், நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் ரூ.1.60 கோடி மதிப்பீட்டிலும் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் ரூ.1.01 கோடி மதிப்பீட்டிலும், மூலதன மான்ய திட்டத்தின் கீழ் ரூ.6.87 கோடி மதிப்பீட்டிலும்,ஆறாவது நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ.64 இலட்சம் மதிப்பீட்டிலும், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டிலும், நமக்கு நாமே திட்டத்தின்கீழ் ரூ.9 இலட்சம் மதிப்பீட்டில் என மொத்தம் ரூ.20.27 கோடி மதிப்பீட்டிலான பணிகள் பல்வேறு திட்டங்கள் மூலம் வாழப்பாடி பேரூராட்சியில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அந்தவகையில், இன்றையதினம் வாழப்பாடி பேரூராட்சி, புதுப்பாளையத்தில் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார மையத்திற்கு கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டு வருவதையும், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் வார்டு எண்-13 காளியம்மன் நகரில் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் சாலைப்பணிகளும், அம்ரூத் 2.0 திட்டத்தின்கீழ் ரூ.1.65 கோடி மதிப்பீட்டில் பாப்பன் ஏரியில் கரையை வலுப்படுத்துதல் மற்றும் நடைபாதை அமைத்தல் பணிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

வாழப்பாடி பேரூராட்சிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் அனைத்தையும் தரமாகவும், உரிய கால அளவிலும் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரவும், குடிநீர் தொடர்பான கோரிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்துப் பணியாற்றிடவும் தொடர்புடைய அலுவலர்களுக்கு இந்த ஆய்வின் போது அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு கலெக்டர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி, தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசு
**நீர்வளத்துறை,**
கீழ்வைகை வடிநில வட்டம், சிவகங்கை 630 562.
மின்னணுமுறை ஒப்பந்தப்புள்ளி அழைப்பு
(இரண்டு உறை ஒப்பந்த முறை-1 எண்ணம் மற்றும் மொத்த வகை ஒப்பந்த முறை-2 எண்ணம்)
TNWRD
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.03 / கீ.வை.வ.வ / கோ.Tender Notice / 2025 -2026 / நாள்.06.10.2025.

தமிழ்நாடு ஆளுநரின் சார்பாக நீர்வளத்துறை, கீழ்வைகை வடிநில வட்டம், சிவகங்கை, கண்காணிப்பு பொறியாளர் அவர்களால் தமிழ்நாடு அரசிடம் நீர்வளத்துறை/ பொதுப்பணித்துறையில் பதிவு செய்துள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து www.tntenders.gov.in என்ற இணையவழியாக மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப்புள்ளி நாள்: 24.10.2025 மொத்த பணிகள்: 03
வேலையின் தோராய மதிப்பு (GST வரி உட்பட): 662.40 இலட்சம்

மேலும் விபரங்களுக்கும், ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை இலவசமாக பெறவும் www.tntenders.gov.in என்ற இணையதளத்தை பார்க்கவும். ஒப்பந்தப்புள்ளி திருத்தங்கள், மாற்றங்கள் மற்றும் காலநீட்டிப்பு ஆகிய விவரங்கள் மேற்காணும் இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

செ.ம.தொ.இ /5674 / ஒப்பந்தப்புள்ளி / 2025
கண்காணிப்பு பொறியாளர், நீ.வ.து.,,
கீழ்வைகை வடிநில வட்டம், சிவகங்கை.

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
கட்டடம் (க&ப) வட்ட அலுவலகம், சிவகங்கை
ஒப்பந்தப்புள்ளி படிவம் / மொத்த ஒப்பந்தம் / இனவிலைமுறை
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 27க. பொ / கட்டடம் (க&ப) வட்டம் / சிவ / 2025 - 2026 / நாள் : 14.10.2025
தமிழக ஆளுநரின் சார்பாக கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து, கட்டட (க&ப) வட்டம், சிவகங்கை அவர்களால் இரண்டு பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது.
1) வ.எண்.1 மற்றும் 2 - ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் : 24.10.2025 மாலை 03.00 மணி முதல் 10.11.2025, மாலை 03.00 மணி வரை இணையதளத்தில் கிடைக்கும், (மின்னணு முறை)
2) வ.எண்.1 மற்றும் 2 - ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி : 10.11.2025, மாலை 03.00 மணி வரை (மின்னணு முறை)
3) வ.எண்.1 மற்றும் 2 - ஒப்பந்தப்புள்ளி : 11.11.2025, 03.00 மணியளவில் திறக்கப்படும் (மின்னணு முறை)
4) வ.எண். 1 மற்றும் 2 - ஒப்பந்ததாரர் பணித்தளத்தினை பார்வையிட்ட சான்றிதழ் பெறுவதற்கு விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் : 31.10.2025
5) வ.எண். 1 மற்றும் 2 - செயற்பொறியாளரிடமிருந்து பணித்தளத்தினை பார்வையிட்ட சான்றிதழ் பெறுவதற்கான கடைசி நாள் : 07.11.2025
ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் வேலையின் தோராய மதிப்பு, முன் வைப்புத் தொகை விவரங்கள், பணிக்காலம் மற்றும் இதர விவரம் அரசு இணையதளமான https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் திருத்தங்கள் / மாறுதல்கள் எதேனும் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என தெரிவிக்கப்படுகிறது.
செ.ம.தொ.இ / 5678 / ஒப்பந்தப்புள்ளி / 2025
கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து
கட்டடம் (க&ப) வட்டம், சிவகங்கை

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண்.65/2025-2026/க(க&ப)வ-1/சென்னை/நாள்:14.10.2025
ஒப்பந்தம்–Lumpsum (இணையதள வழியில் மட்டும்)
தமிழ்நாடு ஆளுநரின்சார்பாக, கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்–1, சேப்பாக்கம், சென்னை–5 அவர்களால் கீழ்க்காணும் பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பொதுப்பணித்துறையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி பெற்றுக் கொள்ளப்படும்.

| வ எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு லட்சங்களில் | முன்வைப்புத் தொகை (ரூபாயில்) மற்றும் பணி முடிக்க வேண்டிய காலம் | தகுதி பெற்ற பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | ஒரு உறை முறை | | | |
| 1. | சென்னை–8, எழும்பூர், ஐஓஜி மற்றும் அரசு பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் உள்ள மகளிர் மருத்துவ அறுவை சிகிச்சைப் பிரிவுக்கு தீயணைப்பு தெளிப்பான் வசதிகள் செய்யும் பணி | ரூ.96.00 இலட்சங்கள் | ரூ.58,000/– 4 (நான்கு) மாதங்கள் | பொதுப்பணித்துறையில் பதிவு பெற்ற வகுப்பு –4 மற்றும் அதற்கு மேல் (திருத்திய வகுப்பின்படி) |
| 2. | சென்னை–8, எழும்பூர், ஐஓஜி மற்றும் அரசு பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் உள்ள முதலியார் பிளாக்கிற்கு தீயணைப்பு தெளிப்பான் வசதிகள் செய்யும் பணி | ரூ.189.35 இலட்சங்கள் | ரூ.1,05,000/– 4 (நான்கு) மாதங்கள் | பொதுப்பணித்துறையில் பதிவு பெற்ற வகுப்பு –4 மற்றும் அதற்கு மேல் (திருத்திய வகுப்பின்படி) |
| 3. | திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காட்டில் கிளை நூலகம் கட்டும் பணி | ரூ.75.20 இலட்சங்கள் | ரூ.48,000/– 4 (நான்கு) மாதங்கள் | பொதுப்பணித்துறையில் பதிவு பெற்ற வகுப்பு –4 மற்றும் அதற்கு மேல் (திருத்திய வகுப்பின்படி) |

குறிப்பு:–
1. ஒப்பந்தப்புள்ளி குறித்த தகவல்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கீழ்க்காணும் இணையதளத்தின் மூலம் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். http://tntenders.gov.in.
2. பணித்தள ஆய்வு சான்று உரிய செயற்பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பிக்க கடைசி நாள். 28.10.2025.
3. இணையதளம் வாயிலாக நிறைவு செய்யப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாளும், நேரமும் 31.10.2025 மாலை 3.00 மணி வரை
4. பெறப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாளும், நேரமும் 31.10.2025 மாலை 4.00 மணி
5. ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை மற்றும் ஒப்பந்தத்தில் ஏதேனும் மாற்றங்கள் / திருத்தங்கள் இருப்பின் http://tntenders.gov.in இணையதளத்தில் மட்டுமே தெரிவிக்கப்படும்
செமதொஇ/ 5665 /ஒப்பந்தப்புள்ளி/2025
கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்–1, சேப்பாக்கம், சென்னை–5.

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
கண்காணிப்புப் பொறியாளர் பொ.ப.து., கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்ட அலுவலகம், சேலம்
மின்னணு– ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மொத்ததொகை ஒப்பந்த முறை
மின்னணு–ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண் 31/2025–2026/க.பொ/க(க&ப)வட்டம்/சேலம்/நாள் 14.10.2025
தமிழக ஆளுநருக்காகவும். அவர் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேலம் -7 அவர்களால் கீழ்க்காணும் பணிகளுக்கு இணையவழி ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. பொதுப்பணித்துறையில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள் இணைய வழி மூலம் "https://tntenders.gov.in" ஒப்பந்தப்புள்ளியை 17.10.2025 பிற்பகல் 3.00 மணி முதல் 31.10.2025 அன்று பிற்பகல் 3.00 மணி வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். "https://tntenders.gov.in" பதிவிறக்கம் செய்த ஒப்பந்தப்புள்ளியை 31.10.2025 பிற்பகல் 3.00 மணிக்குள் இணைய வழி மூலம் இணைய வழி மூலம் "https: "https://tntenders.gov.in" பதிவேற்றம் செய்யலாம். பதிவேற்றம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 31.10.2025 -ல் பிற்பகல் 3.30 மணி முதல் இணைய வழி மூலம் "https://tntenders.gov.in" திறக்கப்படும்.

| வ. எண் | வேலையின் பெயர் | தோராய மதிப்பீட்டுத் தொகை (சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) (ரூபாய் இலட்சத்தில்) | முன்வைப்புத் தொகை (ரூ) | பணி முடிக்க நிர்ணயிக்கப்பட்ட காலம் |
|---|---|---|---|---|
| 1 | கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் உள்ள மாவட்ட கால்நடை பண்ணையில் விந்து பதப்படுத்தும் ஆய்வகத்திற்கான சேகரிப்பு முற்றம், மாற்றும் அறை, உயிரி பாதுகாப்பு வளாகச் சுவர் கட்டடம் கட்டும் பணி | 199.90 | 1,10,000 | 150 நாட்கள் |
| 2 | தருமபுரி மாவட்டம் சித்தேரி அரசு பட்டுப்பண்ணையில் இளம்புழு வளர்ப்பு மனை மற்றும் சௌக்கி (Chawki) வளர்ப்பு மையம் கட்டடம் கட்டும் பணி | 93.60 | 57,000 | 150 நாட்கள் |
| 3 | தருமபுரி மாவட்டம் ராயப்பன்கொட்டாயில் உள்ள பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளியில் 3 வகுப்பறை மற்றும் அறிவியல் ஆய்வக கட்டடம் கட்டும் பணி | 74.65 | 47,500 | 210 |

| | | |
|---|---|---|
| ஒப்பந்ததாரர் வகுப்பு | : | பொதுப்பணித்துறையில் ஒப்பந்ததாரராக வகுப்பு–IV ல் மாநில அளவில் /. இவ்வட்ட அளவில் (ரூ.50.00 இலட்சம் முத முதல் ரூ.2.00 கோடி வரை) மற்றும் அதற்கு மேல் |
| முன் வைப்புத் தொகை செலுத்த வேண்டிய அலுவலர் விவரம் | : | முன் வைப்புத் தொகையை இணையதளம் மூலம் மட்டுமே செலுத்தலாம். |

பணிகளின் பெயர், முன் வைப்புத்தொகை செலுத்த வேண்டிய விவரம் மற்றும் இதர விவரங்கள் மற்றும் விதிமுறைகளை அரசு இணையத்தளத்திலும் "https://tntenders.gov.in" தெரிந்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் மாற்றம் ஏற்படின் அது பற்றிய விவரம் வளைத்தளம் "https://tntenders.gov.in"-ல் பதிவேற்றம் செய்யப்படும்.
செ.ம.தொ.இ./5659/ஒப்பந்தப்புள்ளி/ 2025
கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து, கட்டட (க &ப) வட்டம், சேலம்–7.

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
கட்டட (க & ப) வட்டம் 2, சேப்பாக்கம், சென்னை–05.
குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்: 30 கட்டட (க & ப) வட்டம் 2, 2025–26, நாள்: 13..10.2025
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை: மொத்த வகை/ இன விலை முறை
தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டட (க & ப) வட்டம் 2, சேப்பாக்கம், சென்னை–05 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்காணும் பணிகளுக்காக குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது

| வ.எண் | பணியின் பெயர் மற்றும் முன்வைப்புத் தொகை | பணியின் தோராய மதிப்பீட்டுத் தொகை | காலம் | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் தகுந்த வகுப்பு |
|---|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு மாவட்டத்தில் செங்கல்பட்டில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான கல்லூரி மாணவர்கள் விடுதி கட்டடம் கட்டும் பணி. மு.வை.தொகை: ரூ. 1,06,100/– | ரூ. 192.04 இலட்சங்கள் | 8 மாதங்கள் | வகுப்பு IV மற்றும் அதற்குமேல் |
| 2. | செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரியில் ஆடிட்டோரியம் மேடை, கூரை, தரைகள், உள்புறம் மற்றும் வெளிப்புற சுவர்கள் புதுப்பித்தல் மற்றும் இதர பழுது பார்க்கும் பணிகள் செய்யும் பணி. மு.வை.தொகை: ரூ.85,600 /– | ரூ. 151.20 இலட்சங்கள் | 5 மாதங்கள் | வகுப்பு IV மற்றும் அதற்குமேல் |
| 3. | செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் பழைய ஆண்கள் விடுதியில் உள்ள சமையலறை மற்றும் ஆண்கள் விடுதி (G +3) கட்டடத்தில் பழுதடைந்த கூரை மற்றும் தரைகள், மேற்கூறை, கதவுகள், ஜன்னல்கள் புதுப்பித்தல் மேற்கொள்ளும் பணி. மு.வை.தொகை: ரூ.66,200 /– | ரூ. 112.28 இலட்சங்கள் | 5 மாதங்கள் | வகுப்பு IV மற்றும் அதற்குமேல் |
| 4. | செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சானடோரியத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் நெஞ்சக மருத்துவ வளாகத்தில் உட்புற கான்கிரீட் சாலையை சிறப்பு பழுது பார்க்கும் பணி. மு.வை. .தொகை: ரூ. 1,17,400/– | ரூ. 214.62 இலட்சங்கள் | 8 மாதங்கள் | வகுப்பு III மற்றும் அதற்குமேல் |

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியை அணுகவும். 2. பணித்தள வருகை சான்றிதழுக்கான விண்ணப்பத்தை சம்பந்தப்பட்ட செயற் பொறியாளரிடம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் 22.10.2025. 3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 24.10.2025 மாலை 03.00 மணி வரை 4. ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 24.10.2025 மாலை 04.00 மணி
செ.ம.தொ.இ/5638/ஒப்பந்தப்புள்ளி/2025
கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்–2, சேப்பாக்கம், சென்னை–5.

ஒருநாள் - டி-20 போட்டி தொடரில் பங்கேற்க

# ஆஸ்திரேலியா புறப்பட்டது இந்திய அணி

**மும்பை, அக். 16-**

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள், டி-202 தொடரில் பங்கேற்பதற்காக இந்திய வீரர்கள் நேற்று டெல்லி விமான நிலையத்தில் இருந்து ஆஸ்திரேலியாவுக்கு புறப்பட்டனர்.





**தொடரை வென்றது...**

இந்திய அணி தற்போது வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இந்த தொடரில் இந்தியா 2-0 என்ற கணக்கில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது. இதனை தொடர்ந்து இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிக் கொண்ட ஒரு நாள் தொடர் மற்றும் 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாட உள்ளது.

**ரோகித் - விராட் கோலி...**

இதில் முதலில் ஒருநாள் தொடர் நடைபெறுகிறது. முதல் ஒருநாள் போட்டி வருகிற 19-ந் தேதி நடக்கிறது. ஒருநாள் தொடரின் இந்திய அணியில் சீனியர் வீரர்களான ரோகித் சர்மா, விராட் கோலி இடம் பெற்றுள்ளனர். 7 மாதங்களுக்கு பிறகு இருவரும் களம் காணுவதால் இந்த தொடருக்கான எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலையில் இந்த தொடரில் பங்கேற்பதற்காக இந்திய வீரர்கள் நேற்று டெல்லி விமான நிலையத்தில் இருந்து ஆஸ்திரேலியாவுக்கு புறப்பட்டனர்.

### வீடியோ வைரல்

இந்திய வீரர்கள் ரோகித் சர்மா, விராட் கோலி, ஷ்ரேயாஸ் ஐயர், வாஷிங்டன் சுந்தர், சுப்மன் கில், கேஎல் ராகுல், ஜெய்ஸ்வால், பிரசித் கிருஷ்ணா, அர்ஷ்தீப் சிங், ஜூரெல், நிதிஷ் குமார், ஹர்ஷித் ராணா ஆகியோர் புறப்பட்டனர். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

மகளிர் உலகக்கோப்பை கிரிக்கெட்:

# இந்திய அணிக்கு அபராதம்

**துபாய், அக். 16-**

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் மெதுவாக பந்துவீசிய புகாரின் அடிப்படையில் இந்திய அணிக்கு போட்டி கட்டணத்தில் இருந்து 5 சதவீதம் அபராதம் விதித்துள்ளதாக ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

**விசாகப்பட்டினத்தில்...**

13-வது மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் இந்தியா மற்றும் இலங்கையில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 8 அணிகளும் தங்களுக்குள் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும். இந்த தொடர்ல் கடந்த 12ம் தேதி விசாகப்பட்டினத்தில் நடந்த ஆட்டத்தில் இந்தியா - ஆஸ்திரேலியா அணிகள் மோதின. இந்ஹ்ட மோதலில் 3 விக்கெட் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியா அபார வெற்றி பெற்றது.

**மெதுவாக பந்துவீச்சு...**

இந்நிலையில், இந்த ஆட்டத்தில் மெதுவாக பந்து வீசிய புகாரின் அடிப்படையில் இந்திய அணிக்கு போட்டி கட்டணத்தில் இருந்து 5 சதவீதம் அபராதம் விதித்துள்ளதாக ஐ.சி.சி. அறிவித்துள்ளது. குறிப்பிட்ட நேரத்திற்குள் ஒரு ஓவர் வீச தாமதமானதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

என்னை தொடர்பு கொள்ளவில்லை:

# அஜித் அகார்கர் மீது ஷமி விமர்சனம்

**மும்பை, அக். 16-**

இந்திய அணி தேர்வு குழு என்னை தொடர்பு கொள்ளவில்லை என்று ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் தான் இடம் பெறாத குறித்து தெரிவித்துள்ள முகமது ஷமி தேர்வு குழு தலைவர் அஜித் அகார்கர் மீது கடுமையாக விமர்சனம் செய்துள்ளார்.

**சுற்றுப்பயணம்...**

ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இந்திய அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரிலும் 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரிலும் விளையாட உள்ளது. இந்த இரு தொடருக்கான இந்திய அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. ஒரு நாள் அணியில் சீனியர் வீரர்கள் ரோகித், விராட் கோலி மட்டுமே இடம்பெற்றனர். மற்ற சீனியர் வீரர்களான ஜடேஜா, முகமது சமி ஆகியோர் இந்த அணி இடம் பிடிக்கவில்லை.

**இடம்பெறவில்லை...**

2023 உலகக் கோப்பைக்குப் பிறகு அறுவை சிகிச்சை செய்து கொண்டு ஷமி, அதன்பிறகு காயத்தில் இருந்து மீண்டார். 35 வயதான அவர் சிறிது காலமாக 3 வடிவிலான எந்த அணியிலும் இடம்பெறவில்லை. குறிப்பாக இந்திய டெஸ்ட் அணியில் இடம்பெறவில்லை. கடைசியாக ஜூன் 2023-ல் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் விளையாடினார். இந்தியாவில் நடக்கும் உள்ளூர் போட்டிகளில் மட்டும் ஷமி விளையாடி வருகிறார்.

**விளையாடக்கூடாது...**

இந்நிலையில் ரஞ்சி போட்டியில் விளையாட முடியும் என்றால், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் ஏன் விளையாட முடியாது என தேர்வுக்குழுத் தலைவர் அஜித் அகர்கரிடம் முகமது ஷமி கேள்வி எழுப்பியுள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது:- நான் முன்பே சொல்லிருக்கேன். தேர்வு என்பது என் கையில் இல்லை. உடற்தகுதி பிரச்சினை இருந்தால், நான் இங்கே பெங்கால் அணிக்காக விளையாடக்கூடாது.

**ஏன் விளையாட முடியாது?**

உடற்தகுதிக்காக என்னை இந்திய அணி தொடர்பு கொள்ளவில்லை. ரஞ்சி போட்டியில் விளையாட முடியும் என்றால், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் ஏன் விளையாட முடியாது. நான் வலியில் விளையாடவோ அல்லது அணியை துன்பப்படுத்தவோ விரும்பவில்லை. அறுவை சிகிச்சைக்குப் பிறகு திரும்பி வந்து வலுவான மறு பிரவேசம் செய்ய விரும்பினேன். நானும் அதையே செய்ய முயற்சிக்கிறேன். அவர்கள் (தேர்வுக்குழுக்கள்) என்னை எப்போது தேர்வு செய்ய விரும்புகிறார்களோ அப்போது நான் செல்ல தயாராக இருக்கிறேன் என முகமது ஷமி கூறினார்.

மகளிர் உலக கோப்பையில் தொடர் தோல்வி:

# உஜ்ஜைனி கோவிலில் சாமி தரிசனம் செய்த இந்திய அணி

**உஜ்ஜைனி, அக். 16-**

உலக கோப்பையில் தொடர் தோல்வியை அடுத்து இந்திய மகளிர் கிரிக்கெட் அணியினர் மத்திய பிரதேசத்தில் உள்ள உஜ்ஜைனியின் மகாகாலேஷ்வர் கோயிலுக்குச் சென்று சாமி தரிசனம் செய்தனர்.

**4 இடங்களில்...**

உலக கோப்பை மகளிர் கிரிக்கெட் தொடர் இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெற்று வருகிறது. பாகிஸ்தான் அணியின் போட்டிகள் மட்டும் இலங்கை நடக்கிறது. 8 அணிகள் பங்கேற்று விளையாடி வரும் இந்த தொடரில் முதல் 4 இடங்கள் பிடிக்கும் அணி அரையிறுதிக்கு தகுதி பெறும். அதன் அடிப்படையில் முதல் 4 இடங்களில் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா, இந்தியா உள்ளனர். அடுத்த 4 இடங்களில் நியூசிலாந்து, வங்கதேசம், இலங்கை, பாகிஸ்தான் அணிகள் உள்ளனர்.

**3 போட்டிகளில்...**

முதல் 2 போட்டிகளில் இலங்கை மற்றும் பாகிஸ்தானை வீழ்த்திய இந்திய அணி, அடுத்த 2 போட்டிகளில் தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியாவிடம் தோல்வியை தழுவியது. இதனால் 4 புள்ளிகளுடன் இந்திய அணி 4-வது இடத்தில் உள்ளது. இந்திய அணி வரும் 19-ந் தேதி இங்கிலாந்து அணியுடன் மோதவுள்ளது. இங்கிலாந்து அணி 3 போட்டிகளில் விளையாடி 3 போட்டியிலும் வெற்றி பெற்று 2-வது இடத்தில் உள்ளது. இந்த போட்டியில் இந்தியா வெற்றி பெற தீவிர வலை பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் இந்திய மகளிர் கிரிக்கெட் அணியினர் உஜ்ஜைனியின் மகாகாலேஷ்வர் கோயிலுக்குச் சென்று சாமி தரிசனம் செய்தனர். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு

# சென்னை மாநகராட்சி கட்டுப்பாடு மையத்தில் துணை முதல்வர் ஆய்வு

## மக்களின் புகார்களை நேரடியாக கேட்டறிந்தார்

**சென்னை, அக். 16-**



வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு பணிகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உதவி எண்ணிற்கு பொது மக்களிடமிருந்து வரும் புகார்களை நேரடியாக கேட்டறிந்தார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;- தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று (15.10.2025) பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில், பொதுமக்களிடமிருந்து சமூக வலைதளங்கள் மற்றும் தொலைபேசி எண்ணிற்கு வரப்பெற்ற புகார்கள் மற்றும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்களை கணினிகளில் பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன், 1913 என்ற உதவி எண்ணிற்கு பொதுமக்களிடமிருந்து வரும் புகார்களை நேரடியாக கேட்டறிந்தார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலக கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் அமைக்கப்பட்டுள்ள மிகப்பெரிய எல்.ஈ.டி திரைகள் மூலமாக நகரின் பல்வேறு இடங்களில் உள்ள 22 சுரங்கப்பாதைகளில் போக்குவரத்து சீராக நடைபெறுவதையும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நேற்று காலை 9.00 மணி வரை கடந்த 24 மணி நேரத்தில் சராசரியாக 38.19 மி.மீட்டர் மழை பெய்துள்ளதையும், அதிகபட்சமாக எண்ணூரில் 136.50 மி.மீட்டர் பெய்துள்ளதையும், குறைந்தபட்சமாக அம்பத்தூரில் 0.30 மி.மீட்டர் மழை பெய்துள்ள விவரங்களையும்துணை முதல்-அமைச்சர் மின்னணு திரையில் பார்வையிட்டார். மேலும், மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு கால்வாய்களில் மழை நீர் தடையின்றி செல்வதையும், நேப்பியர் பாலம் அருகில் உள்ள முகத்துவாரத்தில் நீர் தடையின்றி கடலுக்கு செல்வதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்வில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாட்டு பணிகளின் விவரங்கள் குறித்து நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர், மாநகராட்சி மேயர், மாநகராட்சி ஆணையர் ஆகியோரிடம் கேட்டறிந்தார்.

அதற்கு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர், மாநகராட்சி மேயர் மற்றும் ஆணையர் ஆகியோர் பதில் தெரிவிக்கையில், வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் வகையில் சென்னை பெருநகர மாநகராட்சி பகுதிகளில் மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீரை வெளியேற்றும் வகையில் 100 ஹெச்.பி திறன் கொண்ட 150 மோட்டார் பம்புகள், டிராக்டர் மேல் பொருத்தப்பட்ட 500 மோட்டார் பம்புகள் உள்பட பல்வேறு திறன் கொண்ட 1,436 மோட்டார் பம்புகள் தயார் நிலையில் உள்ளன.

பல்வேறு கால்வாய்களில் பணிகள் மேற்கொள்வதற்காக 2 ஆம்பிபியன்கள், 3 ஆம்பிபியன் எஸ்கவேட்டர்கள், 6 ரோபோடிக் எஸ்கவேட்டர்கள், 3 மினி ஆம்பிபியன்கள், 7 சூப்பர் சக்கர் வாகனங்கள், 15 மரக்கிளை அகற்றும் சக்திமான் வாகனங்கள், உட்பட மொத்தம் 478 வாகனங்கள் மற்றும் இயந்திரங்களும், 489 மர அறுவை இயந்திரங்களும் தயார் நிலையில் உள்ளன.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கடந்த நான்காண்டுகளில் 1,217 கிலோ மீட்டர் நீளத்திற்கு மழை நீர் வடிகால்கள் கட்டடப்பட்டுள்ளன, இதுவரை 1,136 கிலோமீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாய்களும், 1 லட்சத்து 6 ஆயிரம் வண்டல் வடிகட்டி தொட்டிகளும் தூர்வாரப்பட்டுள்ளன.

# மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி ராஜினாமா

**மதுரை, அக். 16-**



மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த் ராஜினாமா செய்துள்ளார். மதுரை மாநகராட்சி வரி முறைகேடு விவகாரத்தில் மேயரின் கணவர் முதல் குற்றவாளியாக கைது செய்யப்பட்டு ஜாமினில் வெளியான நிலையில் மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி ராஜினாமா செய்துள்ளது தற்போது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் மதுரை மாநகராட்சி ஐந்து மண்டல தலைவர்கள் ஏற்கனவே ராஜினாமா செய்யப்பட்ட நிலையில் தற்போது மாநகராட்சி மேயர் இந்திராணியும் ராஜினாமா செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.மதுரை மாநகராட்சி ஆணையர் சித்ராவிடம் தனது ராஜினாமா கடிதத்தை இந்திராணி அளித்துள்ளார். அவரது ராஜினாமாவை ஏற்பது தொடர்பாக வரும் 17 ஆம் தேதி மாமன்றக் கூட்டம் நடைபெறுகிறது.

தமிழகத்தில் நடப்பு ஆண்டிற்கான

# வடகிழக்கு பருவமழை இன்று தொடங்குகிறது

**சென்னை, அக். 16-**

நடப்பு ஆண்டிற்கான வடகிழக்கு பருவமழை இன்று தொடங்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் 21ம் தேதி வரை கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நடப்பு ஆண்டிற்கான வடகிழக்கு பருவமழை இன்று தொடங்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வடகிழக்கு பருவமழை தமிழகத்திற்கு அதிகபடியான மழையை தரக்கூடிய பருவமழையாக உள்ளது. இந்நிலையில், தமிழகத்தில் 21-ம் தேதி வரை கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனால் தமிழகத்திற்கு மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் 7 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# ஒருநாள் தொடர்: வங்கதேசத்திற்கு ஆப்கான் பதிலடி



ஆப்கானிஸ்தான் - வங்கதேசம் அணிகளுக்கு இடையே ஒருநாள் தொடர் நடைபெற்றது. முதல் 2 போட்டிகளிலும் ஆப்கானிஸ்தான் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றிய நிலையில் 3-வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி நடைபெற்றது. இதில் முதலில் பேட்டிங் செய்த ஆப்கானிஸ்தான் அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 293 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக இப்ராகிம் சத்ரான் 95 ரன்களும் முகமது நபி 62 ரன்களும் குவித்தனர். வங்கதேசம் தரப்பில் சைப் ஹசன் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனையடுத்து விளையாடிய வங்கதேசம் அணி, ஆப்கானிஸ்தான் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்தனர். இதனால் வங்கதேசம் அணி 27.1 ஓவரில் 93 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக சைப் ஹசன் 43 ரன்கள் எடுத்தார். மற்ற 9 வீரர்கள் ஒற்றை இலக்க ரன்னில் அவுட் ஆகினர். இதனால் ஆப்கானிஸ்தான் அணி 200 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று வங்கதேச அணியை ஒயிட் வாஷ் செய்தது. மேலும் டி20 தொடரை முழுமையாக கைப்பற்றிய வங்கதேசத்துக்கு ஆப்கானிஸ்தான் பதிலடி கொடுத்துள்ளது.

கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தில்

# சுப்ரீம் கோர்ட் இறுதித்தீர்ப்பின் அடிப்படையில் அரசு செயல்படும்

## சட்டசபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி

**சென்னை, அக். 16-**



கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக சுப்ரீம் கோர்ட் பிறப்பிக்கும் இறுதித் தீர்ப்பின் அடிப்படையில் அரசு செயல்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதியளித்துள்ளார்.

கரூர் வேலுசாமிபுரத்தில் த.வெ.க. சார்பில் நடைபெற்ற பிரச்சார கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த நிலையில், அந்த சம்பவம் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் விளக்கம் அளித்தார். அப்போது அவர், "இந்த சம்பவத்தை விசாரிக்க செப்.28-ம் தேதி ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஒரு நபர் ஆணையம் அமைக்கப்பட்டது. மேலும், சென்னை உயர் நீதிமன்ற உத்தரவுப்படி அக்.3-ம் தேதி ஐஜி அஸ்ரா கர்க் தலைமையில் சிறப்பு புலனாய்வு குழு அமைக்கப்பட்டது. தமிழ்நாடு அரசு இந்த சம்பவத்தை சட்டப்படி விரைந்து கையாண்டது. அனுமதி வழங்கல், மருத்துவ உதவி, நிவாரண உதவி அனைத்தும் சரியான முறையில் நடந்தன. இதுபோன்ற துயரங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் தடுக்க வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இச்சம்பவம் குறித்து சுப்ரீம் கோர்ட்டில் தொடுக்கப்பட்ட மேல் முறையீட்டு வழக்கில் இவ்விழக்கு சி.பி.ஐ. விசாரணைக்காக ஒப்படைக்கப்பட இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நான் எனது 50 ஆண்டு கால பொது வாழ்க்கையில் எத்தனையோ நிகழ்ச்சிகளை பார்த்திருக்கிறேன். நடத்தியும் இருக்கிறேன். இங்குள்ள அனைத்து அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும் இத்தகைய அனுபவம் கொண்டவர்கள்தான். மாநாடுகள், பொதுக்கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் நடத்தும் போது அதற்குரிய சட்ட திட்டங்களுக்கும் விதிமுறைகளுக்கும் பொது ஒழுக்கங்களுக்கும் கட்டுப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. அப்படித்தான் நடத்த வேண்டும்.

கட்டுப்பாடுகள் மீறப்படும்போது அதனால் பாதிக்கப்படுவது நிகழ்ச்சிகளை நடத்தும் கட்சியின் தொண்டர்கள்தான், நமது தமிழ்நாடு மக்கள்தான். சமூக வலைதளங்களில் தேவையற்ற வதந்திகள் பரவியபோது அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வீடியோ மூலமாக எந்த அரசியல் கட்சித் தலைவரும் தன் கட்சித் தொண்டர்களும் அப்பாவி பொதுமக்களும் இறப்பதை விரும்ப மாட்டார்கள் என்றுதான் நான் குறிப்பிட்டேன். இறந்தவர்கள் நமது உறவுகள் என்பதை மனதில் வைத்து அனைவரும் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன்.

அதுமட்டுமின்றி, அரசின் உயர் அலுவலர்கள், காவல்துறை உயர் அதிகாரிகள் செய்தியாளர்களை சந்தித்து உண்மைகளைவீடியோ ஆதாரத்தோடு தெளிவுபடுத்தினார்கள். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அனைவரையும் காத்தது நமது அரசு. அனைவருக்கும் உரிய சிகிச்சை அளித்தது நமது அரசு. சுப்ரீம் கோர்ட் இந்த விவகாரத்தில் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது. இறுதித் தீர்ப்பின் அடிப்படையில் அரசு செயல்படும் என்பதை உறுதியோடு நான் சொல்கிறேன். அதேநேரத்தில் இதுபோன்ற துயர சம்பவங்கள் இனி நடக்கக்கூடாது என்ற உறுதியை அனைத்து அரசியல் இயக்கங்களும் பொது அமைப்புகளும் எடுக்க வேண்டும். அனைத்தையும்விட மக்களின் உயிரே முக்கியம், மக்களின் உயிர் விலைமதிப்பற்றது. இதை மனதில் கொண்டு செல்பட வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

# தண்ணீரிலும், தரையிலும் பயணிக்கும் பேரிடர் வாகனங்கள் வாங்கப்படும்

## அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் தகவல்

**சென்னை, அக். 16-**

தண்ணீரிலும் தரையிலும் பயணிக்கும் பேரிடர் வாகனங்கள் வாங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சட்டசபையில் அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் வினாக்கள் விடைகள் நேரத்தில், பேரிடர் மீட்பு பணிகளுக்கு தேவைப்படும் கனரக வாகனங்களை உள்ளூர் கொள்முதல் அல்லது வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்கு அரசு முன்வருமா எனவும் பஞ்சாபில் புயல் வந்த போது தண்ணீரிலும் தரையிலும் பயணிக்கும் வாகனங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட நிலையில் அவற்றை தமிழகத்தில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் துணை சபாநாயகர் பிச்சாண்டி கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்து பேசிய வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் கூறியதாவது:-

நிலச்சரிவு, வெள்ளம் போன்ற பேரிடரில் பயன்படுத்த தீயணைப்பு மீட்பு பணிகள் துறையினரிடம் 9 கனரக வாகன வகைகள் பயன்பாட்டில் உள்ளது. பேரிடர் மீட்பு பணிகளுக்காக கடந்த ஆண்டில் ரூ.193.93 கோடியில் மீட்பு உபகரணம் மற்றும் கனரக வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளது. பேரிடரை எதிர்கொள்ள அனைத்து வகை ஆயத்த நடவடிக்கையையும் தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது.

பஞ்சாப் மாநிலத்திற்கு அதிகாரிகளை அனுப்பி தண்ணீரிலும் தரையிலும் பயணிக்கும் வகையில் பேரிடர் மீட்பு வாகனங்களை வாங்க ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பேரிடருக்கு தனியாக நிதி உள்ளது. மத்திய அரசு நிதி அளித்தாலும், அளிக்காவிட்டாலும் தேவையான நிதியை பெற்று பேரிடர் உபகரணங்களை கொள்முதல் செய்வோம். இவ்வாறு அவர் கூறினார்.

தீபாவளி பண்டிகை: சென்னையில் இருந்து

# இன்று முதல் கூடுதலாக 275 சிறப்பு பேருந்துகள் இயக்கம்

**சென்னை, அக். 16-**

தீபாவளி பண்டிகையையொட்டி சென்னையில் இன்று முதல் கூடுதலாக 275 சிறப்பு இணைப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன.

சென்னையில் தீபாவளியை ஒட்டி வெளியூர் செல்லும் பயணிகளின் வசதிக்காக இன்று முதல் வரும் 19-ம் தேதி வரை 4 நாட்களுக்கு கூடுதலாக 275 சிறப்பு இணைப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளன. கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பஸ் முனையம், கோயம்பேடு எம்.ஜி.ஆர். பஸ் முனையம் மற்றும் மாதாவரம் புறநகர் பஸ் நிலையம் ஆகிய இடங்களுக்கு மாநகரின் பல்வேறு இடங்களில் இருந்து செல்ல இப்பஸ்கள் இயக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலை வெகுவாக குறைத்திடவும், வெளியூர் செல்லும் பயணிகள் எளிதாக பயணிக்கும் வகையில் இன்று (16.10.2025) முதல் 19.10.2025 ஆகிய 4 நாட்களுக்கும் வெளியூர் செல்லும் பஸ்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள மூன்று இடங்களில் இருந்து புறப்படும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.கிளாம்பாக்கம் பஸ் நிலையம், கோயம்பேடு பஸ் நிலையம், மாதவரம் புறநகர் பஸ் நிலையம்.

சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளிலிருந்து மேற்குறிப்பிட்ட மூன்று பஸ் நிலையங்கள்/பகுதிக்கு மாநகர பஸ்கள் ஏற்கனவே இயக்கப்பட்டு வருகின்றன. எனினும் எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வெளியூர் பயணிகள் மேற்குறிப்பிட்டுள்ள மூன்று பஸ் நிலையங்களுக்கு எளிதாக சென்று வெளிமாவட்ட நீண்ட தூர பஸ்களை பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக மாநகர போக்குவரத்துக்கழகம் கூடுதலாக 275 சிறப்பு இணைப்பு பஸ்கள் இன்று முதல் 19-ம் தேதி வரை இயக்கப்பட உள்ளன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கரூர் த.வெ.க. மாவட்ட செயலாளருக்கு ஜாமீன்

**கரூர், அக். 16-**

கரூர் த.வெ.க. மாவட்ட செயலாளருக்கு ஜாமீன் வழங்கி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கரூர் மாவட்டம் வேலுசாமிபுரத்தில் கடந்த செப்.27-ம் தேதி நடந்த த.வெ.க. பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 100-க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். இதுதொடர்பாக கரூர் நகர போலீஸார் த.வெ.க. கரூர் மேற்கு மாவட்ட செயலாளர் வி.பி.மதியழகன், பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், மாநில இணைச் செயலாளர் நிர்மல் குமார் ஆகியோர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கில் தலைமறைவாக இருந்த மதியழகனை திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறை அருகே தனிப்படை போலீஸார் செப்.29-ம் தேதி கைது செய்தனர். மேலும் அவருக்கு அடைக்கலம் கொடுத்த பவுன்ராஜும் கைது செய்யப்பட்டார். விடிய, விடிய விசாரணை நடத்திய போலீஸார் செப்.30-ம் தேதி மருத்துவ பரிசோதனைக்கு பிறகு கரூர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். இருவரும் நீதிமன்றக்காவலில் சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த நிலையில் இருவரது நீதிமன்றக் காவலும் முடிந்த நிலையில், காவலை நீட்டிக்க முடியாது எனக்கூறி ஜாமீனில் விடுதலை செய்து கரூர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மழைத்துளி
மண்ணின்
உயிர்த்துளி

# சினிமா CINI செய்திகள்

## ‘மைலாஞ்சி’ பட இசை வெளியீட்டு விழா



அஜயன் பாலா இயக்கத்தில் மாடம் பட நடிகர் ஸ்ரீராம் கார்த்திக் நாயகனாக நடிக்கும் படம் மைலாஞ்சி இப்படத்தில் அவருக்கு ஜோடியாக க்ருஷா குருப் நடித்திருக்கிறார். இவர்களுடன் முனீஷ்காந்த், சிங்கம் புலி, தங்கதுரை உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். செழியன் ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த படத்திற்கு இளையராஜா இசையமைத்திருக்கிறார். அஜய் அர்ஜுன் புரொடக்ஷன்ஸ் சார்பில் டாக்டர் ப. அர்ஜுன் தயாரித்திருக்கிறார்.

விரைவில் வெளியாகவுள்ள இந்த படத்தின் இசை மற்றும் டீசர் வெளியீட்டு விழா, சென்னையில் சமீபத்தில் நடைபெற்றது. இதில், அகிலா பாலு மகேந்திரா, கங்கை அமரன், சீமான், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் தயாரிப்பாளர் ப. அர்ஜுன் பேசுகையில், ‘மைலாஞ்சி’ திரைப்படம் எனக்கு ஏராளமான அனுபவங்களை கற்றுத் தந்திருக்கிறது. இந்தத் திரைப்படம் எனக்கு நட்பை கற்றுக் கொடுத்திருக்கிறது. காதல் உணர்வை மென்மையாக சொல்லக்கூடிய இந்த கதைக்கு இளையராஜா தான் வேண்டும் என கேட்டேன். செழியனின் நட்பிற்காக இளையராஜா பணியாற்ற ஒப்புக் கொண்டார் என்றார்.

ஒளிப்பதிவாளர் செழியன் பேசுகையில், அஜயன் பாலா எனக்கு நண்பன். முதலில் படத்தை இயக்கினால் அதற்கு நீதான் ஒளிப்பதிவு செய்ய வேண்டும்’ என்று சொல்லி அவருடைய பையில் இருந்து ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்து, அட்வான்ஸ் என்று என்னிடம் கொடுத்தார். அதற்குப் பிறகு 25 ஆண்டுகள் கழித்து ஒரு நாள் என் அலுவலகத்திற்கு வந்து படத்தில் பணியாற்ற வேண்டும் எனக் கேட்டார். அப்போது நீ கொடுத்த அட்வான்ஸ் அப்படியே இருக்கிறது. வா படப்பிடிப்புக்கு செல்லலாம்’ என்று படப்பிடிப்புக்கு புறப்பட்டோம் என்றார்.

## விக்ரம் பிரபு, அக்ஷய்குமார் கூட்டணியில் ‘உருவாகும் சிறை’



செவன் ஸ்கிரீன் ஸ்டுடியோ SS லலித் குமார் தயாரிப்பில், விக்ரம் பிரபு & L.K அக்ஷய் குமார் நடிப்பில், அறிமுக இயக்குநர் சுரேஷ் ராஜகுமாரி இயக்கத்தில், உண்மைச் சம்பவத்தை அடிப்படையாக வைத்து உருவாகியுள்ள படம் “சிறை”. வரும் டிசம்பர் 25 ஆம் தேதி கிறிஸ்துமஸ் தினத்தன்று வெளியாகிறது.

டாணாக்காரன் இயக்குநர் தமிழின் கதை மற்றும் திரைக்கதையில் சுரேஷ் ராஜகுமாரி இப்படத்தை இயக்கியிருக்கிறார்.

ஒரு காவலதிகாரிக்கும், விசாரணைக் கைதிக்குமான பயணம் தான் இப்படத்தின் மையம். விக்ரம் பிரபுவுக்கு ஜோடியாக அனந்தா நடித்துள்ளார். SS லலித் குமார் மகன் LK அக்ஷய் குமார் இப்படத்தில் அறிமுகமாகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு முழுமையாக முடிந்து இறுதிக்கட்ட பணிகள் வேகமாக நடைபெற்று வருகிறது. இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக், பெரும் வரவேற்பைப் பெற்ற நிலையில், விரைவில் டீசர் இசை மற்றும் டிரெய்லர் வெளியீடு பற்றிய அறிவிப்புகள் வெளியாகுமென படக்குழு அறிவித்துள்ளது

## தீபாவளி தினத்தன்று வெளியாகும் ‘டீசல்’



தேர்ட் ஐ எண்டர்டெயின்மெண்ட் & எஸ்பி சினிமாஸ் தயாரித்து வழங்க, சண்முகம் முத்துசாமி இயக்கத்தில் ஹரிஷ் கல்யாண், அதுல்யா ரவி நடிப்பில் உருவாகி இருக்கும் படம் ‘டீசல்’. தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நாளை வெளியாக இருக்கும் இந்தப் படத்தின் பத்திரிக்கையாளர்கள் சந்திப்பு சமீபத்தில் நடைபெற்றது. அப்போது பேசிய

இயக்குநர் சண்முகம் முத்துசாமி, ஒரு நாள் பெட்ரோல் பங்க்கில் நின்ற டேங்கர் லாரியிலிருந்து பக்கெட் பக்கெட் ஆக பெட்ரோல், டீசலை சிறுவர்கள் திருடி கொண்டிருந்தார்கள். அவர்களை பின்தொடர்ந்து சென்ற போது தான் இந்த அதிர்ச்சிகரமான உலகம் பற்றி தெரிய வந்தது. இதையே படமாக்கலாம் என்று உருவானது தான் ‘டீசல்’.

இதற்குப் பின்னால் இருக்கும் விஷயங்கள் பற்றி நாங்கள் நிறைய தெரிந்து கொள்ள முயற்சித்தபோது உயிர் பயம் வரை அச்சுறுத்தல் நிகழ்ந்தது. இந்த மாஃபியாவால் ஒரு சாதாரண மனிதன் எந்த அளவிற்கு நேரடியாக பாதிக்கப்படுகிறான் என்பதை இதில் சொல்லியிருக்கிறோம் என்றார். ஹரிஷ் கல்யாண், பேசிகையில், என்னை நம்பி இந்த படத்தில் வாய்ப்பு கொடுத்த இயக்குநர் சண்முகம் சாருக்கு நன்றி. ஆக்ஷன் படங்கள் மீது எனக்கு அதீத விருப்பம் உண்டு. ஆனால், அதற்கான சரியான கதை வரும் வரை காத்திருந்தேன். அப்படியான கதையாக எனக்கு ‘டீசல்’ அமைந்தது.

தங்கத்தை விட அதிக மதிப்பு மிக்கதாக பார்க்கப்படும் எரிபொருள் உலகத்திற்கு பின்னால் என்னவெல்லாம் நடக்கிறது என்பதை இந்த கதை சொல்லி இருக்கிறது. மக்கள் இந்த படத்தை எப்படி ஏற்றுக் கொள்வார்கள் என்பதை தெரிந்து கொள்ள ஆர்வமாக இருந்தேன். படத்தின் டிரைலர் வெளியான போது பெரிதாக யாரும் திட்டவில்லை. அதுவே எங்களுக்கு பெரிய நம்பிக்கை கொடுத்தது. ஆக்ஷன் படத்திற்கான சரியான மீட்டரை நடிப்பில் கொண்டு வந்திருக்கிறேன் என்று டிரைலர் பார்த்த பலரும் பாராட்டினார்கள்.

## நாளை வெளியாகும் ‘டியூட்’



அறிமுக இயக்குநர் கீர்த்தீஸ்வரன் இயக்கத்தில், பிரதீப் ரங்கநாதன் மற்றும் பிரேமலு புகழ் மமிதா பைஜூ நடிப்பில் உருவாகியுள்ள படம் ‘டியூட்’. மைத்ரி மூவி மேக்கர்ஸ் தயாரித்துள்ள இப்படம் தீபாவளி வெளியீடாக நாளை திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இந்த நிலையில், படத்தின் வெளியீட்டுக்கு முந்தைய விளம்பர நிகழ்ச்சி மற்றும் இசை வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது. இதில், படக்குழுவினர்கள் கலந்து கொண்டு படம் குறித்து பல தகவல்களை பகிர்ந்து கொண்டார்கள்.

மைத்ரி மூவி மேக்கர்ஸ் தயாரிப்பாளர்கள் நவீன் யெர்னேனி மற்றும் ஒய்.ரவி ஷங்கர் பேசுகையில், 8 வயது முதல் 80 வயது வரை எல்லா வயதினரும் இந்த படத்தை பார்த்து கொண்டாடலாம். லவ், எமோஷன், ஆக்சன், செண்டிமெண்ட் என எல்லா விஷயங்களும் இந்த படத்தில் அமைந்துள்ளது.” என்றனர். இயக்குநர் கீர்த்தீஸ்வரன் பேசுகையில், படத்தில் உங்களுக்கு எல்லோருக்கும் பிடித்த பயங்கர ஹைப்பரான பிரதீப்பையும் பார்ப்பீர்கள். இன்னொரு பக்கம் மெச்சூர்டான, எமோஷனலான இன்னொரு வெர்ஷன் பிரதீப்பையும் பார்ப்பீர்கள். என்னுடைய முதல் படத்திலேயே நான் என்ன நினைத்தேனோ அதை அப்படியே கொண்டு வர சப்போர்ட் செய்த பிரதீப் மற்றும் தயாரிப்பாளர்களுக்கு நன்றி. என்றார்.

## நத்தத்தில்
## தமிழர் தேசம் கட்சி ஆலோசனை கூட்டம்



**நத்தம், அக்,16-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில் உள்ள அம்மா திருமண மண்டப வளாகத்தில் தமிழர்தேசம் கட்சியின் ஆலோசனை கூட்டம் நடந்தது.

இதற்கு கட்சி நிறுவன தலைவர் கே.கே.செல்வகுமார் தலைமை தாங்கினார். மாநில பொதுச் செயலாளர் தளவாய் ராஜேஷ்,மாநில மாணவரணி செயலாளர் பூமி அம்பலம், மாவட்ட செயலாளர்கள் பிரபுஅம்பலம், ஆண்டிஅம்பலம்,விஜய் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் அடுத்த ஆண்டு ஜனவரியில் திருச்சியில் நடைபெற உள்ள முத்தரையர் அரசியல் அதிகாரம் மீட்பு மாநாடு குறித்து மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகளிடையே ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

இதில் மாநில மருத்துவர் அணி செயலாளர் அன்புஎழில்,வடக்கு மாவட்ட அவைத்தலைவர் சேகர் உள்ளிட்ட தமிழர் தேசம் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



**திண்டுக்கல் மேட்டுப்பட்டி 44-வது வார்டு பகுதியில் மாமன்ற உறுப்பினர் மார்த்தாண்டம் ஏற்பாட்டின் பேரில் 2000 பேர்களுக்கு சேலை வேஷ்டிகள் வழங்கினார். உடன் முன்னாள் கவுன்சிலர் முகமது ரபிக் மற்றும் பலர் உள்ளனர்.**

## அருப்புக்கோட்டையில்
## 100 நாள் பணியாளர்கள் வேலை வழங்கக்கோரி ஆர்ப்பாட்டம்



**அருப்புக்கோட்டை அக்.16-**

அருப்புக்கோட்டை பாலையம்பட்டி ஊராட்சியில் 100 நாள் பணியாளர்களுக்கு முழுமையான 100 நாள் பணி வழங்கவில்லை வருடத்திற்கு 15 தினம் மட்டும் வழங்குவதை கண்டித்தும் மேலும் அரசு அறிவித்தரூ 319க்கு பதில் ரூ220 ரூபாய் மட்டும் சம்பளம் வழங்குவதை கண்டித்து காவிரி வைகை கிருதுமால் குண்டாறு பாசன விவசாயிகள் கூட்டமைப்பினர் அருப்புக்கோட்டை ஒன்றிய அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சங்க மாவட்ட தலைவர் ராம் பாண்டியன், தலைமை வகித்தார். தன்னார்வலர் ராஜாராம் முன்னிலையில் வைத்தார்.சங்க பொதுச் செயலாளர் சிவகங்கை அர்ஜுனன் மாவட்ட செயலாளர் கோபாலகிருஷ்ணன் அண்ணா கட்டுமான தொழிற்சங்க சித்தநாதன் காரியாபட்டி சபாபதி சேகர் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

நிகழ்ச்சியில் திருவிருந்தால்புரம் கருப்பசாமி, வேல்முருகன், காலனி ராணி, ராஜீவ் நகர் சித்தாய் அம்மாள், தீர்த்தக்கரை மணிமேகலை, இபி காலனி மனோகரன், சண்முக வேல் நகர் இந்திரா உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட 100 நாள் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## அழுகிய நிலையில் ஆண் பிணம்

**நத்தம், அக்.16-**

மதுரை மாவட்டம் மேலூர் அருகே கடுமிட்டான்பட்டியை சேர்ந்தவர் வைரவன்(63). இவருக்கு சளி,காய்ச்சல் மற்றும் தீராத வயிற்று வலி இருந்து வந்துள்ளது.இதனால் கடந்த சில நாட்களுக்கு முன்பு வைரவன் நத்தம் அரசு மருத்துவமனைக்கு சென்று வருகிறேன் என கூறி வீட்டை விட்டு சென்றுள்ளார். நேற்று முன்தினம் அழகர்கோவில் மலைப்பகுதியில் ஒருவர் அழகிய நிலையில் கிடப்பதாக நத்தம் போலீசாருக்கு தகவல் கிடைத்தது. அதன் பேரில் சம்பவ இடத்திற்கு சென்ற நத்தம் போலீசார் இறந்தவரின் உடலை கைபற்றி நத்தம் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். இச்சம்பவம் குறித்து நத்தம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## வத்தலக்குண்டு அருகே
## ரெங்கப்பநாயக்கன்பட்டி ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்
### பொதுமக்களிடம் மனுக்கள் பெறப்பட்டன



**வத்தலக்குண்டு அக்.16-**

வத்தலக்குண்டு அருகே ரெங்கப்பநாயக்கன்பட்டியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடந்தது.

வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றியம் ரெங்கப்பநாயக்கன்பட்டிஊராட்சிக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் ரெங்கப்பநாயக்கன் பட்டியில்ஒரு தனியார் திருமண மஹாலில் நடந்தது. துவக்க விழாவுக்கு வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றியவட்டார வளர்ச்சி அலுவலர் முருகேசன் தலைமை வகித்தார்.

நிலக்கோட்டை முதியோர் பென்ஷன் பிரிவு தாசில்தார் சந்திரன், விருவீடு வருவாய் ஆய்வாளர் வெண்ணிலா, வத்தலக்குண்டு தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள் கனிக்குமார்,கனக துரைஆகியோர் முன்னிலை வகித்தனர். கனிக்குமார் திட்டம் பற்றி விளக்கி பேசினார். பொதுமக்கள் வழங்கிய மனுக்களை தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள் கனிக்குமார் கனகதுரை ஆகியோர் பெற்று கொண்டனர்.

முகாமில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் புவனேஸ்வரி, , மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சின்ன ராஜா, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சுமதி மற்றும் வருவாய், மின்சாரம், வேளாண், சமூக நலம், கூட்டுறவு உள்ளிட்ட 15 துறை அதிகாரிகள் கலந்து கொண்டு பொதுமக்களிடம் துறை ரீதியான மனுக்களை பெற்றுக் கொண்டு உடனுக்குடன் ஆன்லைன் மூலம் பதிவு செய்தனர். வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றிய அலுவலக உதவியாளர் நாச்சியப்பன் தொகுத்து வழங்கினார்.

முகாமில்திமுக நிர்வாகிகள் பழனிச்சாமி, ராமசாமி, அன்பழகன்.முருகன், வீரபாண்டி தேவராஜ்மற்றும் பொதுமக்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் ரெங்கப்பநாயக்கன்பட்டிஊராட்சி செயலாளர் பிரபுநன்றி கூறினார். பாதுகாப்பு ஏற்பாடுகளை விருவீடுபோலீசார் செய்திருந்தனர்.

## அப்துல்கலாம் பிறந்தநாள் விழா:
## திருமங்கலம் அன்னை வசந்தா டிரஸ்ட்டில் ஆதரவற்ற முதியோருக்கு நலத்திட்ட உதவி
### நகராட்சி கவுன்சிலர் அமுதா சரவணன் வழங்கினார்



**திருமங்கலம், அக். 16-**

மதுரை மாவட்டம் திருமங்கலம் அன்னை வசந்தா டிரஸ்ட் நிறுவனத்தில் மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் பிறந்தநாள் விழா மற்றும் தீபாவளி திருநாளை முன்னிட்டு ஆதரவற்ற ஏழை ,எளிய முதியோருக்கு வேஷ்டி,சேலை, இனிப்பு மற்றும் மதிய நேர நல் உணவினை திருமங்கலம் நகராட்சி 23வது வார்டு காங்கிரஸ் கவுன்சிலர் அமுதா சரவணன் நலத்திட்ட உதவிகளாக வழங்கினார்.

திருமங்கலம் நகரில் ஏழை எளிய ஆதரவற்ற முதியோர்களுக்கு தினம் தோறும் நல்உணவு வழங்கிடும் திட்டத்தை 1100 நாட்களுக்கு மேலாக வள்ளலார் வழியில் சிறப்புடன் செயல்படுத்தி வரும் அன்னை வசந்தா டிரஸ்ட்டில் மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் பிறந்தநாள் விழா மற்றும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கிடும் விழா நேற்று சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு அன்னை வசந்தா டிரஸ்ட் தலைவர் அமுதவள்ளி பழனிமுருகன் தலைமை வகித்தார்.நிறுவனர் மற்றும் செயலாளர் சித்ரா ரகுபதி பொருளாளர் அருள்ஜோதி ஆறுமுகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.டிரஸ்ட் நிறுவனர் எஸ்.எம்.ரகுபதி வரவேற்றார். அதன்படி ஏராளமான ஏழை எளிய ஆதரவற்ற முதியவர்கள் பங்கேற்ற இவ்விழாவில் திருமங்கலம் நகராட்சி 23வது வார்டு காங்கிரஸ் நகர் மன்ற உறுப்பினர் அமுதா சரவணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ஏழை எளிய ஆதரவற்ற முதியோர்களுக்கு வேஷ்டி சேலைஇனிப்பு, பலகாரம் மற்றும் மதிய நல் உணவினை நேரில் வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

முன்னதாக மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் அவர்களின் திருவுருவப்படத்திற்கு நிகழ்வினில் பங்கேற்ற அனைவரும் மலர்களை துாவி மரியாதை செலுத்தினர்.

இந்த நிகழ்ச்சியில் சரவணன் அன் கோ சரவணன், திருமங்கலம் நகர் காங்கிரஸ் கமிட்டி தலைவர் கரிசல்பட்டி எஸ்.சௌந்தரபாண்டி, தொல்காப்பிய மன்ற நிறுவனர் இருளப்பன்,திருமங்கலம் மக்கள் நலச்சங்க தலைவர் ஆர்.சக்கையா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.உறுப்பினர்கள் சீதையம்மாள், சந்தியாசங்கர் உள்ளிட்ட ஏராமானோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வினை முன்னாள் வி.ஏ.ஓ ராஜா தொகுத்து வழங்கினார்.விழாவின் நிறைவில் டிரஸ்ட் துணைத் தலைவர் ஆறுமுகம் நன்றி தெரிவித்தனர்.

## ஒட்டன்சத்திரம் அருகே
## உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்



**ஒட்டன்சத்திரம்,அக். 16-**

தமிழகம் முழுவதும் மக்களின் குறைகளை வீட்டுக்கே வந்து கேட்டறிந்த தீர்வு காணும் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட தொப்பம்பட்டி, மரிச்சிலம்பு,வேலம்பட்டி, தும்மலபட்டி உள்ளிட்ட பகுதிகளுக்கு உணவுப் பொருள் வழங்கள் துறை அமைச்சர் அர. சக்கரபாணி ஆலோசனையின் பேரில் கோட்டாட்சியர் கண்ணன் தலைமையில் நடைபெற்றது.

முகாமிற்கு மாவட்டத் துணைச் செயலாளர் ராஜாமணி முன்னிலைவகித்தார். தமிழ்நாடு அரசின் நான்காண்டு சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக் கூறி முகாமில் மனு கொடுத்த பயனாளிகளுக்கு உடனடியாக முதலமைச்சரின் மருத்துவ காப்பீடு அட்டை, குடும்ப அட்டை, தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் பொன்ராஜ், தங்கம், சுப்பிரமணி,வட்டாட்சியர் பிரசன்னா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தாஹிரா, குமரன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் கிருஷ்ணசாமி உள்ளிட்ட முன்னாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



● சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் 1913 என்ற உதவி எண்ணிற்கு பொதுமக்களிடமிருந்து வரும் புகார்களை நேற்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கேட்டறிந்தார். இதில் அமைச்சர் கே.என்.நேரு, மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையர் வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.



● கரூர் விவகாரம் தொடர்பாக சட்டப்பேரவையிலிருந்து எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமையில் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் வெளிநடப்பு செய்தனர்.

### கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தில் காரசார விவாதம்:

# சட்டப்பேரவையில் இருந்து அ.தி.மு.க.வினர் வெளிநடப்பு

சென்னை, அக். 16-

கரூர் சம்பவத்தில் காரசார விவாதம் ஏற்பட்டது. இதனை தொடர்ந்து அ.தி.மு.க.வினர் வெளிநடப்பு செய்யப்பட்டனர்.

கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் குறித்து சட்டசபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம் அளித்து பேசினார்.

சமூக வலைத்தளங்களில் தேவையற்ற வதந்திகள் பரவியபோது, அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வீடியோ மூலமாக நான் கேட்டு கொண்டேன்.

அதே நேரத்தில் இது போன்ற துயர சம்பவம் இனி நடக்கக்கூடாது என்ற உறுதியை அனைத்து அரசியல் இயக்கங்களும், பொது அமைப்புகளும் எடுக்க வேண்டும். எல்லாவற்றையும் விட மக்களின் உயிரே முக்கியம். மக்களின் உயிரே விலைமதிப்பற்றது.

இதனை மனதில் வைத்து செயல்பட வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன் என கூறினார்.

இந்நிலையில், முழுமையான பாதுகாப்பு கொடுத்திருந்தால் அசம்பாவிதம் ஏற்படாமல் தவிர்த்திருக்கலாம் என எடப்பாடி பழனிசாமி கூறினார். சில விசயங்களை குறிப்பில் இருந்து நீக்கும்படியும் கோரினார்.

இதனால், இரு கட்சி உறுப்பினர்கள் இடையே காரசார விவாதம் ஏற்பட்டது. அப்போது, அ.தி.மு.க. உறுப்பினர்கள் தரையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது சபாநாயகர் அப்பாவு, தொடர்ந்து அமளியில் ஈடுபட்டால், காவல் துறையை வைத்து நடவடிக்கை எடுப்பேன் என எச்சரிக்கை செய்ததுடன், உறுப்பினர்கள் இருக்கையில் அமர வேண்டும். இல்லை என்றால் நடவடிக்கை எடுப்பேன் என கூறினார். அமைதியாக இருந்தால், எதிர்க்கட்சி தலைவர் நீக்க கூறிய விசயங்களை நீக்குவேன் என்றும் கூறினார்.

முதல்வர் அறிக்கையில் தவறு ஏதேனும் இருப்பின் அதனை சுட்டி காட்டலாம் என்று துரைமுருகன் கூறினார். எனினும், அவையில் தொடர்ந்து தரையில் அமர்ந்து அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். சபாநாயகரை கண்டித்து அ.தி.மு.க. உறுப்பினர்கள் கோஷம் எழுப்பினர். இதனையடுத்து, அவர்கள் சட்டசபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

இதனை முன்னிட்டு, சட்டசபை வளாகத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்பும் போடப்பட்டிருந்தது.

### கோபிசெட்டிபாளையத்தில் புறவழிச்சாலை:

# சட்டசபையில் அமைச்சர் எ.வ.வேலு பதில்

சென்னை, அக். 16-

சட்டசபையில் 2-ம் நாள் அவர்வில் உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கு அமைச்சர் எ.வ.வேலு பதில் அளித்தார்.

தமிழக சட்டசபையின் 2-ம் நாள் அமர்வு நேற்று தொடங்கி நடைபெற்றது. கூட்டம் தொடங்கியதும் உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு துறை சார்ந்த அமைச்சர்கள் பதில் அளித்து வருகின்றனர். அந்த வகையில், கோபிசெட்டிப்பாளையத்தில் புறவழிச்சாலை அமைக்க வேண்டும் என செங்கோட்டையன் கோரிக்கை விடுத்தார்.

இதற்கு அமைச்சர் எ.வ.வேலு, கோபிசெட்டிபாளையத்தில் புறவழிச்சாலைக்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.மேலும், மதுரை சுற்றுலா மாளிகையை புதுப்பிப்பது தொடர்பாக எம்.எல்.ஏ. எழுப்பிய கேள்விக்கு, மதுரையில் புதிய சுற்றுலா மாளிகை கட்டப்பட்டு வருவதால் பழைய மாளிகையை புதுப்பிப்பது குறித்து பரிசீலனை செய்யப்படும் என்று அமைச்சர் எ.வ.வேலு பதில் அளித்தார்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று நீர்வளத்துறையில் 2024-2025 ஆண்டில் ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகளுக்கான (பட்டயம்), தேர்வின் மூலம் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை வரைதொழில் அலுவலர் (சிவில்) பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு, நீர்வளத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 77 தேர்வாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் வழங்கினார்.

### தீபாவளிக்கு பண்டிகையை முன்னிட்டு 4 நாட்கள்

# டெல்லியில் பட்டாசுகளை விற்பதற்கு, வெடிப்பதற்கு சுப்ரீம் கோர்ட் அனுமதி

புதுடெல்லி, அக். 16-

டெல்லியில் தீபாவளிக்கு பசுமை பட்டாசுகளை விற்கவும், வெடிக்கவும் சுப்ரீம் கோர்ட் அனுமதி அளித்துள்ளது.

டெல்லியில் தீபாவளிக்கு பசுமைப் பட்டாசுகளை விற்க, வெடிக்க நிபந்தனைகளுடன் சுப்ரீம் கோர்ட் அனுமதி அளித்து உத்தரவு பிறப்பித்துள்ளது.

இது தொடர்பான வழக்கை விசாரித்த சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி பி.ஆர். கவாய், நீதிபதி கே. வினோத் சந்திரன் அடங்கிய அமர்வு, "தீபாவளியை முன்னிட்டு அக்டோபர் 18 முதல் 21 வரை டெல்லியில் பசுமைப் பட்டாசுகளை விற்பனை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.

நியமிக்கப்பட்ட இடங்களில் மட்டுமே விற்பனை செய்யப்பட வேண்டும். காலை 6 மணி முதல் 7 மணி வரையிலும், இரவு 8 மணி முதல் 10 மணி வரையிலும் பட்டாசு வெடிக்க அனுமதி அளிக்கப்படுகிறது.

ஆன்லைன் தளங்கள் மூலம் பட்டாசுகளை விற்கக் கூடாது" என தெரிவித்துள்ளது.

சுப்ரீம் கோர்ட்டின் இந்த அனுமதிக்கான காரணம் குறித்து விளக்கிய நீதிபதிகள், "ஏற்கெனவே அமலில் இருந்த முழுமையான தடை என்பது எதிர்மறை விளைவைக் கொண்டிருந்தது.

காற்றின் தரத்தில் அதிக சேதத்தை ஏற்படுத்தும் வழக்கமான பட்டாசுகளை கடத்த வழி வகுத்தது. எனவே, நாங்கள் ஒரு சமநிலையான அணுகுமுறையை எடுக்க வேண்டிய தேவை இருந்தது." என தெரிவித்துள்ளனர்.

முந்தைய விசாரணையின் போது, டெல்லியில் பட்டாசுகளை உற்பத்தி செய்யவும், சேமித்து வைக்கவும், விற்பனை செய்யவும், பயன்படுத்தவும் ஒரு வருட காலத்துக்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவை மறுபரிசீலனை செய்யப்போவதாக நீதிபதிகள் தெரிவித்திருந்தனர்.

### ஆந்திர மாநிலத்தில்

# ரூ.13,430 கோடியில் திட்ட பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டுகிறார் பிரதமர்

ஆந்திரா, அக். 16-

பிரதமர் மோடி இன்று ஆந்திராவில் ரூ.13,430 கோடி திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

பிரதமர் நரேந்திர மோடி இன்று ஆந்திரா மாநிலம் கர்னூல் மாவட்டத்திற்கு வருகை தருகிறார். இன்று கர்னூலில் உள்ள சிவாஜி ஸ்பூர்த்தி கேந்திராவை பார்வையிடுகிறார். பின்னர் கர்னூலில் ரூ.13,430 கோடி மதிப்பிலான மேம்பாட்டு திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார். ஓர்வக்கல் மற்றும் கொப்பர்த்தி தொழில்துறை வழித்தடத்தை தொடங்கி வைக்கிறார். பாபக்கினி ஆற்றின் மீது கட்டப்பட்டுள்ள பாலத்தை திறந்து வைக்கிறார்.

குண்டலப்பள்ளி -கனிகிரி புறவழி சாலை பணிக்காக ரூ. 4,920 கோடியில் அடிக்கல் நாட்டுகிறார். சப்பாவரம்-ஷீலாநகர் இடையே ரூ. 960 கோடி செலவில் மேம்படுத்தப்பட்ட பசுமை சாலை கட்டுமான பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார். பீலேறு- கலூரு இடையே 4 வழி சாலை விரிவாக்க பணிக்கு ரூ.1,140 கோடியில் பணியை தொடங்கி வைக்கிறார். கெயில் எரிவாயு திட்டத்தையும் நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, துணை முதல்வர் பவன் கல்யாண், அமைச்சர்கள் மற்றும் எம்.பி.க்கள் கலந்து கொள்கின்றனர். பிரதமர் மோடி நந்தியால் மாவட்டத்தில் உள்ள மல்லிகார்ஜுன சுவாமி கோவில் மற்றும் ஸ்ரீசைலம் கோவில்களில் பூஜை செய்து வழிபடுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு சட்டப்பேரவையில்...(1-ம் பக்க தொடர்ச்சி)

பின் கேரவன் வாகனத்தை பின் தொடர்ந்து பெருவாரியான ரசிகர்களும் கட்சியினரும் நிகழ்ச்சி நடைபெறும் இடத்துக்கு வந்து கொண்டிருந்தனர். நிகழ்ச்சி நடைபெறும் பகுதியில் கூட்டம் அதிகமாக இருந்ததாலும் பிரச்சார வாகனத்தின் பின்னால் ஏராளமானோர் வந்ததாலும், கரூர் நகர உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர், அட்சயா மருத்துவமனை அருகே பிரச்சார வாகனத்தை நிறுத்தி கூட்டத்தில் உரையாற்றுமாறு அறிவுறுத்தி உள்ளார்.

**எஸ்.பி. அறிவுறுத்தல்...**

அதற்கு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள், முன்பே அனுமதிக்கப்பட்ட இடத்தில்தான் பேசுவோம் என பிடிவாதமாக தொடர்ந்து முன்னேறி சென்றனர். கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அக்கட்சியின் இணைச் செயலாளரை பல முறை தொடர்பு கொண்டு பிரச்சார வாகனத்தை நிறுத்துமாறு கேட்டுக்கொண்டும், அவர் த.வெ.க. தலைவர் தனது உரையை தொடங்குமாறு கேட்டுக்கொண்டார். காவல் துறையின் வழிமுறைகளை மீறி வாகனம் அட்சயா மருத்துவமனையில் இருந்து 30-35 மீட்டர் சென்றபோது இருபுறமும் இருந்த கூட்டத்தினர் இடையே இது நிலைகுலையச் செய்தது.

**காவல்துறை, தீயணைப்பு**

நிகழ்ச்சி நடைபெற்ற இடத்தில் கூட்ட நெரிசலால் காயமடைந்தும், சோர்வினால் மயக்கமடைந்தும், மக்கள் உதவி கோருவதைக் கவனித்து காவல்துறையினர் மருத்துவமனை ஆம்புலன்ஸ்க்கு தகவல் அனுப்பி வரவழைத்திருக்கிறார்கள். இவ்வாறு, கூட்ட நெரிசல் ஏற்பட்டதால் அவர்களைக் காப்பாற்றத்தான் ஆம்புலன்ஸ் வந்ததே தவிர, நெரிசல் ஏற்படுவதற்கு முன்பு எந்த ஆம்புலன்ஸும் வரவில்லை. காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புத்துறையினர் மற்றும் ஆம்புலன்ஸ் மீட்புக் குழுவினர் மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பிவைத்தனர்.

**2 வழக்குள் பதிவு...**

மீட்புப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, த.வெ.க.வினர் இரண்டு ஆம்புலன்ஸ் ஓட்டுநர்களைத் தாக்கி ஆம்புலன்ஸ் வாகனத்தை சேதப்படுத்தி இருக்கிறார்கள். இதனால், மீட்புப் பணிகள் தடைபட்டன. இது தொடர்பாக கரூர் நகர காவல்நிலையத்தில் இரண்டு வழக்குள் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. சம்பந்தப்பட்ட நபர் கரூர் நீதித்துறை நடுவர் முன்பு சரணடைந்திருக்கிறார்.

மற்றொரு குற்றவாளி இரண்டு வழக்குகளிலும் தொடர்புடையவராக கைது செய்யப்பட்டுள்ளார். என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.



● சென்னை கிண்டி அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள மறைந்த முன்னாள் குடியரசு தலைவர் ஏ.பி.ஜெ.அப்துல்கலாமின் 95-வது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் சார்பில் அவரது திருவுருவச்சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவ படத்திற்கு அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், மா.சுப்பிரமணியன், கோவி.செழியன் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் துணை மேயர் மு.மகேஷ்குமார் உள்ளார்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியனை கல்வி சுற்றுலாவாக சட்டமன்ற கூட்டத்தொடரை காண வந்த காரைக்குடி அழகப்பா அரசு கலைக்கல்லூரி மாணவர்கள் சந்தித்து வாழ்த்து பெற்றனர். உடன் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் சா.மாங்குடி மற்றும் பேராசிரியர்கள் உள்ளனர்.